# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"
—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 2 | ஞாயிறு 4-6-39 பிரமாதி௵ வைகாசி௴ 21௳ | முத்து 10 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| தலையங்கப் பிரச்னை | ... ... ... ... ... | 288 |
| குறிப்பு | ... ... ... ... ... | 290 |
| தென்றல் காற்று | ... ... ... .... ... | 292 |
| வார நடப்பு | ... ... ... ... ... | 294 |
| விதி | ... ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி | 295 |
| லைப் அஷ்யூரன்ஸ் | ... ஸ்ரீ. எஸ். கே. சுப்ரமண்யம் | 299 |
| எதிரொலி | ... ஸ்ரீ. பி. வி. சுப்ரமண்யம் | 303 |
| கை எழுத்தும் தலை எழுத்தும் | ... ஸ்ரீ. டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி | 306 |
| போர்ச்சுகல் நிலைமை | ... ஸ்ரீ. த. கிருஷ்ணமூர்த்தி | 308 |
| டாக்கி அல்லது பேசும் படம் | ... ... ஸ்ரீ. ஜி. கே. சேஷகிரி | 311 |
| சிறுவர் பகுதி | ... ஸ்ரீமதி கமலா பத்மநாபன் | 314 |
| வலைவீச்சு | ... ... ... ... ... | 316 |

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# தலையங்கப் பிரச்னை

அரசியல் வாதிகளுக்கும் அரசாங்கங்களுக்கும் பிரச்னைகள் கிளம்பிக்கொண்டே இருக்கின்றன, தீர்ந்துகொண்டே இருக்கின்றன. பத்திரிகாசிரியர்களுக்கும் பிரச்னைகள் இருக்கின்றன. அவைமட்டும் தீறுவதில்லை. உதாரணமாக ஒரு வாரப் பத்திரிகையில் தலையங்கம் எழுதுகிறவனுக்கு வாராவாரம் ஒரு குறித்த தினத்தில் குறித்த காலத்திற்குள் அதை எழுதி முடிக்கவேண்டிய பெரிய பிரச்னை இருக்கிறது.

வாரப்பத்திரிகை ஆசிரியருக்குத்தான் இந்தத்தொல்லையா, தினசரி ஆசிரியரின் கதி இன்னும் மோசமில்லையா என்று கேட்கலாம். இல்லை. தினசரி ஆசிரியர் வேலை இன்னும் கொஞ்சம் எளிதானது. அவர் எதைப்பற்றி வேண்டுமானாலும் நீட்டி எழுதிவிடலாம். வாரப் பத்திரிகையில் தலையங்கமாக இருக்கவேண்டிய விஷயம் அவ்வளவு சுளுவாக அமையாது. அதில் எதைப்பற்றி வேண்டுமானாலும் எழுத முடியாது.

எனவே வாரப் பத்திரிகை ஆசிரியன் ஏதாவது முக்கியமான சம்பவம் நடந்துகொண்டே இருக்கவேண்டுமென்று பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்துக்கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் எழுதுவது ருசிப்படாது; எடுபடாது. இல்லை, ஏதாவது பொதுவாக ஒரு விஷயத்தைப்பற்றி எழுதிவிடலாம் என்றாலோ தலையங்கம் 'டாபிகல்' இல்லை என்று தள்ளுபடி ஆய்விடும்.

டாபிகலாக மட்டும் இருந்தால் ஆய்விட்டதா? காரசாரமாக இருக்கவேண்டும். நீருவிபோல ஓடவேண்டும். அகாடெமிகலாக இருக்கக் கூடாது. என்னதான் செய்வது இந்த உபத்திரவத்திற்கு?

அதற்குத்தான் சிலர் திட்டுவதையே தலையங்க விஷயமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வசை எப்பொழுதும் செல்லுபடியாகும். வெகு சுகமாக ரஸிப்பது. எழுதித் தள்ளுவதற்கும் அது மிகவும் லேசு. படிப்பவரும் அதிகமாக மூளையைச் செலுத்தவேண்டியதில்லை. மேலெழுந்தவாரியாக வாசித்துக்கொண்டு போவதற்கு வெகு ஜோர்.

மற்றொருவகையாகவும் தலையங்கத்தை ருசிகரமாக்கலாம். தென்னலிராமன் முறை அது. விஷயத்தைத் தேள் கொடுக்கு விஷம்மாதிரி கடைசியில் சில வரிகளில் வைத்து விடுவது. முன்னால் எல்லாம் ஹாஸ்யம்—கோமாளித்தனம். இதற்குத் திறமைவேண்டும். எல்லோராலும் முடியாது. ஓரளவு ஸர்வக்ஞத்துவமும் வேண்டும். அது எல்லோருக்கும் கிடைக்கும் பாக்கியமில்லை.

இந்த இரண்டு பாதைகளையும் பின்பற்ற முடியாத ஆசிரியர்கள்பாடு கொஞ்சம் திண்டாட்டம் தான். ஐரோப்பிய நெருக்கடியைப்பற்றியும் முன்னணிக் கட்சியைப்பற்றியும் எவ்வளவுதரம் எவ்வளவு தினுசாகத்தான் எழுதுகிறது? நிலைமையை 'அப்படியே' அலசி இரண்டு பக்கத்தில் பொழிந்தால்கூட வாசகர்கள் அப்பேர்பட்ட 'பளுவான' சாமானை கிரகிக்க இஷ்டப்படுகிறதில்லை. பிரகாசம் கமிட்டி அறிக்கையைப்பற்றி எழுதினால் யாருக்குப்பிடிக்கும்? புதுப் புது அபிப்பிராயங்களைப் புகுத்தித் தலைகீழாகத்தான் விழுந்தாலும் யாரும் படிக்க மாட்டார்கள்.

விஷயம் முக்கியமானதாயும் இருக்கவேண்டும்; தாற்காலிகப் பொருத்தமுள்ளதாகவும் இருக்கவேண்டும்; உட்கொள்வதற்கு சிரமமில்லாமலும் இருக்க

வேண்டும். சின்னதாகவும் இருக்கவேண்டும். இவ்வளவு கட்டுப்பாடுகளுக்குள் தலையங்கம் எழுதி வாரா வாரம் செத்துப் பிழைப்பதென்றால் — சே! என்ன பிழைப்பு என்று கூடத் தோன்றுகிறது.

இவ்வளவும் எதற்காக வந்தது? இந்த வாரம் தலையங்கத்திற்குச் சரியான விஷயம் ஒன்றும் ஆசிரியருக்கு இந்த நிமிஷம் வரையில் உதிக்காததால்தான். இதை எழுதி முடித்து அச்சுக்கு அனுப்பின பிறகு ஏதாவது முக்கியமான விஷயம் தோன்றலாம். ஆனால் அது இந்த வாரத்திற்கு உபயோகமில்லை. அடுத்த வாரத்திற்கும் பழைய சமாசாரமாகிவிடும். மறுபடியும் பிரச்னைதான்! அதற்கென்ன செய்கிறது? அது ஆசிரியரின் ஊழ்வினை.

ஆகையால் நண்பர்கள் தலையங்கத்தை அவ்வளவு லேசாகத் தள்ளிவிடவேண்டாம் என்று ஆசிரியர் கோருகிறார். அவர் ரொம்ப தொல்லைப்பட்டு எழுதிக் குவித்த சொத்து! முதலில் தள்ளிவிட்டாலும் கூட இறுதியிலாவது ஒரு பார்வை அதைப் பார்த்தால் ஆசிரியர் மண்டையை உடைத்துக் கொண்டதற்கு அத்தாட்சியாக ஓரிரண்டு வரிகள் கண்ணில் படும். அதைப் படித்து நீங்கள் புன்னகைகொண்டாலும் அவருக்கு ஒரு திருப்தி.

அதனால் ஆசிரியர்கள் தன்னுடைய வேலையைப்பற்றித் தாழ்மையாக எண்ணுகிறார்கள் என்று நினைக்கிறீர்களா? அது தானே இல்லை. தங்கள் தலையங்கங்களால் தான் உலகம் புரளுகிறது என்று அவர்கள் எண்ணம்.

உண்மையில் அவர்கள் மூளைதான் புரளுகிறதுபோல் இருக்கிறது.

---

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகளும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வாராவாரம் "பாரத மணி"யில் வெளியாகும் அனுபந்தங்களுக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங்களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும்படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

குறிப்பு

# வங்காளத்தில் புயல்

நண்பர் பஸ்லுல் ஹக்கின் பெரு முயற்சியால் இன்று வங்காளத்தில் புயல்காற்று வீச ஆரம்பித்திருக்கிறது. முஸ்லீம்களுக்கு சர்க்கார் உத்தியோகத்தில் பாதுகாப்பு அளிக்கும் உத்தேசத்தோடு பஸ்லுல் ஹக் விகிதாசாரத்தை ஏற்படுத்தினார். முஸ்லீம்களுக்குப் பெரும்பான்மை விகிதாசாரம் கொடுத்திருப்பதையும் ஹிந்துக்களின் நியாயமான உரிமைகள் பாதிக்கப்பட்டிருப்பதையும் பிரபல ஹிந்து தலைவர்கள் கண்டித்துக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள்.

இதைப் பொருட்படுத்தாமல் பஸ்லுல் ஹக் மற்றோர் கார்யத்தையும் செய்தார். கல்கத்தாக் கார்ப்பொரேஷனில் ஹிந்துக்கள் மெஜாரடியைக் குலைத்து முஸ்லீம்களுக்கு அதிகப்படி பிரதிநிதித்துவம் கொடுக்கும் நோக்கத்துடன் முனிஸிபல் சீர்திருத்த மசோதா கொண்டு வந்தார். இதனால் ஹிந்துக்கள் மிகவும் ஆத்திரமடைந்திருக்கிறார்கள். ஹிந்துக்கள் தூதுக் கோஷ்டி ஒன்று கவர்னரைப் பேட்டிகண்டு நிலைமையை விளக்கி வந்திருக்கிறது. மாகாணத்தில் சமாதானத்தை நிலை நிறுத்துவது கவர்னர் பொறுப்பாதலால் பின்னால் வரப்போகும் விபரீத பலன்களை அறிந்து நியாயமான தீர்ப்புக் கூறுவாரென்று நம்புகிறோம்.

கவர்னர் தலையிடாமல் பஸ்லுல் போன வழியே கார்யங்கள் நடைபெறுமானால் என்ன பலன்ஏற்படுமென்று தெரிந்துகொள்வது கஷ்டமல்ல. வங்காளிகள் மிகவும் உணர்ச்சியும் வீராவேசமும் கொண்டவர்கள். ஏமாற்றமடைந்த ஓர் சமூகம், அதுவும் வகுப்பு உணர்ச்சியால் தூண்டப்பட்ட ஓர் சமூகம், என்னென்ன கார்யங்களில் இறங்குமென்று ஒருவராலும் அறியமுடியாது. புரட்சி இயக்கம் தோன்றி மறைந்துள்ள வங்காளத்தில் இத்தகைய விபரீதமான உணர்ச்சிகளைக் கிளப்பிட்டால் வங்காள ஹிந்து இளைஞர்கள் என்ன செய்வார்கள் என்பதை ஒருவராலும் கூற முடியாது. வங்காளத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையை நாம் கவனிக்கும்போது விரைவில் கொடிய ஹிந்து-முஸ்லீம் கலவரம் ஏற்பட்டாலும் ஆச்சர்யம் படுவதற்கில்லை. ஆம். நெருக்கடி வலுத்துவிட்டது. இவ்வித பலன்கள் ஏற்படுமென்று பஸ்லுல் ஹக்குக்குத் தெரியாதா? நன்றாகத் தெரியும். பிறகு ஏன் அவர் இப்படிச் செய்கிறார்?

(1) முஸ்லீம்களுக்கு தாம் பாடுபடுவதாகக் காட்டிக்கொள்ள வேண்டும். அப்படிக் காட்டிக் கொள்ளும்போது பிற மதத்தினருக்கு ஹானி உண்டானால் கூடப் பாதகமில்லை. வகுப்புக் கலவரம் உண்டானால் ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. பெரிவாரித் தொகையுள்ள முஸ்லீம்கள் ஹக்கை ஆதரிப்பார்கள். மந்திரி பதவிக்கு ஆபத்து வராது.

(2) மந்திரி சபைக்கு விரோதமாக வங்காளத்தில் காங்கிரஸ் இயக்கம் பலமாகப் பரவி வருகிறது. அந்த இயக்கத்தைத் தடுக்க வேண்டும். என்ன செய்யலாம்? வகுப்பு துவேஷத்தைக் கிளப்பி விட்டுவிட்டால் காங்கிரஸைவிட்டு முஸ்லீம்கள் வெளியேறிவிடுவார்களல்லவா? மேலும், முனிஸிபல் சட்டம் கொண்டு வந்ததற்குப் காரணம் காங்கிரஸின் பலத்தைக் குலைக்கும் நோக்கம்தான் என்று பஸ்லுல் ஹக் கூறியதை நாம் இப்போது ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆகவே மந்திரி பதவியைக் காப்பற்றிக்கொள்ளும் நோக்கத்துடன் மேற்சொன்ன மசோதாக்களை பஸ்லுல் ஹக் நிறைவேற்றியிருக்கிறார் என்று கூறத் தேவையில்லை.

முஸ்லீம்களின் நியாயமான உரிமைகளை ஹக் பாதுகாத்துக் கொண்டிருந்தால் நமக்கு ஆக்ஷேபணை கிடையாது. ஆனால் ஹிந்துக்கள் உரிமையைப் பிடுங்கி முஸ்லீம்களுக்குக் கொடுப்பது கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போலல்லவா இருக்கிறது? உண்மையான முஸ்லீம்கள் இந்தக் கார்யத்தை ஆதரிக்கமாட்டார்கள். ஹுமாயூன் கபீர், கான்பகதூர் அப்துல் ஹமீத் முதலிய முஸ்லீம் தலைவர்கள் பஸ்லுல் ஹக்கைக் கண்டித்துவிட்டார்கள்.

இந்த அல்ப உத்தியோக பர்வம் யுத்த பர்வமாக முடிவதை ஒருவரும் விரும்பமாட்டார்கள். பஸ்லுல் ஹக் யுத்த பர்வத்தை ஆவலுடன் எதிர்பார்த்த போதிலும் நியாய புத்தியுள்ள முஸ்லீம்களும், ஹிந்துக்களும் ஒன்று சேர்ந்து பஸ்லுல் ஹக்கை மந்திரி சபையை விட்டு வெளியேற்றுவார்களென்று நம்புகிறோம். அப்படிச் செய்யாவிட்டால் வங்காளத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

## கபட நாடகம்

‘ஏழு அதிசயங்கள்’ உலகில் இருக்கின்றன வல்லவா? அத்துடன் இந்தியாவில் ஐரோப்பியர்கள் நடந்து கொள்ளும் விதத்தை எட்டாவது அதிசயமாகச் சேர்த்துக் கொள்ளலாம். காங்கிரஸ் மாகாணங்களில் உள்ள ஐரோப்பியர்கள் காங்கிரஸை வாயார வாழ்த்தி ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம் செய்கிறார்கள். காங்கிரஸ் மிகவும் யோக்கியதையாக நடந்து கொள்கிறது என்று ஸ்ரீ ஜேம்ஸ் முதல் ஸ்ரீ டௌன் வரையில் பல ஐரோப்பியர்கள் ‘ஸர்டிபிகேட்’ கொடுத்திருப்பதை நாம் அறிவோம். ஆனால் வங்காளத்தில் ஐரோப்பியர்கள் நடந்து கொள்வது குறிப்பிடத்தக்கதாகும். இன்று பஸ்லுல் ஹக் மந்திரி பதவியில் இருப்பதற்கு ஐரோப்பியர்கள் காரணம் என்று எல்லோருக்கும் தெரியும். ஹக்கின் கொடுங்கோன்மையை ஐரோப்பியர்கள் ஆதரித்து வருகிறார்கள்; அவர்கள் இன்று காங்கிரஸ் மந்திரி சபை வங்காளத்தில் ஏற்படுவதைத் தடுத்து வருகிறார்கள்.

சென்னையிலும் பம்பாயிலும் ஐரோப்பியர்கள் நடத்துவது கபட நாடகமா அல்லது வங்காளத்தில் நடத்துவது கபட நாடகமா? இந்தக் கேள்விக்குப் பதில் கூறுவது கஷ்டமல்ல.

உண்மையில், எங்கெல்லாம் காங்கிரஸைத் தோற்கடிக்க சந்தர்ப்பம் இருக்கிறதோ அந்த இடங்களில் ஐரோப்பியர்கள் பிற்போக்காளருடன் சேர்ந்து கொள்ளத் தயங்குவதில்லை. அஸ்ஸாம் ஓர் உதாரணம். “நாங்கள் நடுநிலைமைதான் வகிக்கிறோம். எந்தக் கட்சியையும் ஆதரிக்கவில்லை. நியாயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காரை நாங்கள் ஆதரிக்கிறோம்.” என்று தர்மபத்தினிகள் போலக் கூறுகிறார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் அவர்கள் என்ன செய்யவேண்டும்? நடுநிலைமை வகித்து எந்தக்கட்சி சர்க்கார் ஏற்படுத்துகிறதென்று பார்க்க வேண்டும். பிறகு அந்த சர்க்காரை ஆதரிக்கட்டுமே, யார் வேண்டாமென்றார்கள்? ஆனால் ஐரோப்பியர்கள் அப்படியெல்லாம் செய்யமாட்டார்கள். வங்காளத்தில் காங்கிரஸின் மேல் கல்லை விட்டெறிந்து ‘நடுநிலைமை’ வகித்தார்கள்.

ஐரோப்பியர்கள் எங்கெல்லாம் விஷமம் செய்ய முடியுமோ அந்த இடங்களில் அதைச் செய்யப் பின் வாங்குவதில்லை. எங்கே காங்கிரஸ் பலம் பெற்றிருக்கிறதோ, அங்கே வேறு வழியில்லாமல் ஸ்தோத்திரம் பண்ணுவதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் காங்கிரஸ் சர்க்கார் தங்களுக்கு இடைஞ்சல் உண்டாக்காமல் இருக்க வேண்டுமல்லவா? இந்தக் கபடநாடகத்தை பொது ஜனங்கள் நன்றாகக் கவனித்து வைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். ஆனால், ஐரோப்பியர்கள் மனப்பான்மையைப்பற்றி சில அரசியல் வாதிகள் இன்னும் சந்தேகம் கொண்டிருந்தால், சமீபத்தில் லண்டனில் ஸர் காம்பெல் பேசியதை ஞாபக மூட்டுகிறோம்.

### ஒரு விஷயம்!

நீங்கள் எவ்வளவோ விதங்களில் பணத்தைச் செலவு செய்கிறீர்கள். ஆனால் மிகவும் உபயோகமான வழியில் செலவு செய்வது அவசியமல்லவா? உங்களுக்கு சந்தோஷத்தையும், உங்கள் குழந்தைகளுக்கு அறிவையும், கொடுக்கக்கூடிய வழியில் நீங்கள் ஏன் செலவழிக்கக்கூடாது? ஆம்; “பாரத மணிக்கு” ஒரு வருஷம் சந்தாவைக் கட்டிவிடுங்கள். அந்தப்பணம் வீண் செலவல்ல.

# தென்றல் காற்று

சென்ற வாரம் கூறியபடி 'போகிற போக்கில்' எழுத ஆசிரியர் பேனாவைத் தீட்டிக்கொண்டு உட்கார்ந்ததும் திடீரென்று மைசூர் பிரயாணம் செய்யவேண்டிய அவசியமேற்பட்டது. உட்கார்ந்து கொண்டு போகிற போக்கில் எழுதுவதை விட மைசூர் போகிற போக்கில் எழுதுவது மிகவும் பொருத்தமாக இருக்குமல்லவா? ஆகவே பேனா ஆசிரியர் பைக்குள் போயிற்று. ஆசிரியரும் மைசூருக்குப் போனார்!

* * *

சென்ற சில வாரங்களாக 'பாரதமணி'க்கு ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கண்டு நண்பர்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள். கதைகள், கட்டுரைகளின் 'அழகுகளை' ஒருவர் வர்ணித்துவிட்டு முகப்புப் படத்தைப் பற்றிக் கூறுகிறார். "மூன்று வாரங்களாக மாடுகள் படத்தை போடுகிறீர்களே, அதுதான் சரி! எப்போது பார்த்தாலும் சினிமா நக்ஷத்திரங்கள் படங்களைப் பத்திரிகைகளில் போட்டு பைத்தியம் பிடிக்க அடித்து விட்டார்கள். நீங்களாவது மாடுகள் படத்தைப்போட்டதற்கு ரொம்ப சந்தோஷப் படுகிறேன். மேற் சொன்னவர்களைக் காட்டிலும் மாடுகள் ஒரு நாளும் தோற்றத்திலோ புத்தியிலோ குறைந்தவைகளல்லவாதலால் நீங்கள் அடிக்கடி மாடுகளைப் படம் பிடித்துப் போடவும்" என்று கேட்டுக் கொள்ளுகிறார்.

* * *

இயற்கைத் தோற்றங்களைப் பிரசுரிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் முன் பக்கத்தில் படத்தைப் போடத் தொடங்கினோம். ஆனால் நாம் எதிர்பார்த்தபடி மூன்று படங்களும் மாடுகள் படங்களாகப் போய்விட்டன! ஆனாலும் படங்களின் தாத்பரியத்தைப் பார்த்ததும், "பரவாயில்லை, நண்பர்கள் ரஸிக்கா விட்டாலும் கண்டிக்கமாட்டார்கள்" என்று எண்ணினோம். ஆனால் அதை ஒரு நண்பர் ரஸித்தது மல்லாமல் நம்மைப் பாராட்டியதைப் பார்க்கும்போது கொஞ்சம் கர்வம் உண்டாகிறது. ஆனால் படங்களைப் பிரசுரிக்கும்போது நமக்கு இந்த யோசனை எட்டவில்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

* * *

மாடுகள் சார்பாக பேசக் கூடியவர்கள் வைஸ்ராய் பிரபுவைத் தவிர வேறொருவருமில்லை என்று எண்ணியிருந்தோம். ஆனால் இன்று நம் சந்தேகம் தீர்ந்தது. மாடுகளைப்பற்றிய நல்ல படங்கள் கைவசம் இருந்தால் உடனே காரியாலயத்துக்கு அனுப்பும்படி கடிதம் எழுதிய நண்பரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

* * *

"பாரதமணி"யிடம் பேரன்புகொண்ட ஓர் அன்பர் கூறுகிறார்: "நீங்கள் எப்போதும் கிராமம் கிராமம் என்று எழுதுகிறீர்களே, கிராமத்தைப்பற்றி எழுதி என்ன செய்வது? செய்ய வல்லவா வேண்டும்? நீங்கள் எழுதி சர்க்கார் ஒன்றும் செய்யாமலிருப்பதைவிட நீங்கள் கிராம சம்பந்தமான கட்டுரைகள் போடும் இடத்தில் ஒரு கதையைப் போடுங்கள். படிப்பதற்காவது ருசியாக இருக்கும்."

* * *

பாரதமணியை ஆரம்பித்ததே கிராம சேவை, அறிவு வளர்ச்சி இந்த இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுதான் கட்டுரைகள் அந்தத் தராசில் நிறுக்கப்பட்டு பிரசுரம் செய்யப் படுகின்றன. இந்த லக்ஷ்யத்தை நாம் விட்டுக் கொடுக்க முடியாது. இரண்டாவதாக, நாம் எழுதுகிறபடி ஒன்றும் செய்ததில்லை என்பதற்காக நாம் எழுதாமல் இருக்க முடியாது. எழுதிப் பிரயோஜனமில்லை என்பது வாஸ்தவம்தான். முக்கியமாக சர்க்கார்தான் நிர்மாண வேலையைத் தீவிரமாகச் செய்ய வேண்டுமென்பதும் உண்மை. ஆனால் சர்க்கார் ஏதோ தங்களாலான கிராம நிர்மாணத் தொண்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். சிக்கி

ரத்தில் திட்டங்கள் போட்டு தீவிரமாக வேலை செய்வார்களென்றே நம்புகிறோம். இந்தத் தொண்டில் "பாரதமணி" யோசனைகளைக்கூறும். யார் கேட்டாலும் சரி கேட்காவிட்டாலும் சரி, கடைசியாக கதைகள் போட வேண்டுமென்று நண்பர் கூறியிருக்கிறார். பலர் அப்படித்தான் எழுதுகிறார்கள். இதை உத்தேசித்துத்தான் நாம் பத்திரிகை முழுதும் கிராமக் கட்டுரை மயமாக அடித்து விடாமல் சிறு கதைகள், நாடகங்கள் பிரசுரித்து வருகிறோம். ஆனால், "கிராமப் பேச்சே எடுக்கக்கூடாது. கட்டுரைகளே வேண்டாம். கதை மயமாகத்தான் இருக்க வேண்டும்" என்றால் அது முடியாத காரியம்.

* * *

பத்திரிகை நடத்தும்போது பலதரப்பட்டவர்களுடைய ருசியையும் திருப்தி செய்விக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் நண்பர்கள் தங்களுக்கு ஏற்ற முறையில் பத்திரிகை வெளி வரவில்லை என்று கோபப்படக்கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

* * *

சினிமாப் பகுதியை நாம் பிரசுரிக்கவில்லையென்று ஓர் ரஸிகர் விளாசு விளாசென்று விளாசுகிறார். "சினிமா நக்ஷத்திரங்கள் படத்தை போட உங்களுக்கு வெட்கமில்லை? உங்கள் லக்ஷ்யமென்ன? நீங்கள் செய்யும் காரியமென்ன?" என்று மற்றொருவர் சண்டைக்கு வருகிறார். இந்த சந்தர்ப்பத்தில் நாம் என்ன செய்வது, சொல்லுங்கள் பார்க்கலாம். தர்ம சங்கடம், ஐயா, தர்மசங்கடம்!

* * *

முக்கியமாக, நண்பர்கள் கோபப்படாமல் சமாதானமாகவே யோசனைகளை எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். எல்லோருடைய யோசனைகளையும் 'ஆயிரங்கட்டி வராகனுடன்' ஆசிரியர் பெற்றுக்கொண்டு எல்லோரையும் திருப்தி செய்விக்க முடியாவிட்டாலும் ஒரு சிலருக்காவது திருப்தி உண்டாக்க முயலுவாரென்று உறுதி கூறுகிறோம்.

# வார நடப்பு

இவ்வார நிகழ்ச்சிகள் அதிக முக்கியத்துவம் வகிக்கத்தகுந்ததாக இல்லை. வழவழவென்ற சங்கதிகளே வெளி வந்திருக்கின்றன. எந்த விஷயத்தைப்பற்றியும் ஒரு . தீர்மானமாக முடிவடைந்த செய்தி கிடைக்கவில்லை.

ராஜ்கோட்டில் சீர்திருத்தக் கமிட்டி அமைத்தாய்விட்டது. சமஸ்தான ஜனங்களை சீர்திருத்தக் கமிட்டியுடன் ஒத்துழைக்கும்படி காந்திஜி உபதேசம் செய்திருக்கிறார். சீர்திருத்தக் கமிட்டி ஏற்படுத்தக்கூடிய பொருப்பாட்சித் திட்டத்தை ஜனங்கள் குறைகூறாமல் வரவேற்க வேண்டும் என்று காந்திஜி கேட்டுக் கொள்ளுகிறார்.

தவிர, ராஜ்கோட்டே ஓர் புதிய சமஸ்தானமாகிவிட்டது. காந்திஜியை "வரவேண்டாம்" என்று தர்பார் வீரவல்லா சொன்ன காலமெல்லாம் மலை ஏறிப்போய்விட்டது. இப்பொழுது அதே காந்திஜீயை மிக்க ஆதரவுடன் தாகூர் சாகேப் விசாரித்து விருந்தளித்ததாக செய்தி கூறுகிறது. எல்லாம் உலகம் போகிற போக்கு!

ஜூன் மாதம் முதல் தேதி வரையில் காந்திஜி ராஜ்கோட்டில் தங்குவார் எனத் தெரிகிறது.

ஸுபாஷ் பாபு ஆரம்பித்திருக்கும் முன்னணிக் கட்சி பல இடங்களிலும் தீவிரமான எதிர்ப்பைப்பெறினும், தன் வேலையை ஜரூராக நடத்திக் கொண்டுவருவதாக செய்தி கூறுகிறது.

இந்தியாவின் பல பாகங்களிலும் அக்கட்சியை பிரபலப்படுத்தி அதனுள் ஜனங்களைச் சேர்க்க ஸுபாஷ் பாபு தீவிரமாக முயற்சி செய்கிறார்.

நேஷனல் ஹெரால்ட் என்னும் பத்திரிகையில் ஜவஹர்லால் நேரு காங்கிரஸ் நிலைமையைப்பற்றி இரண்டு மூன்று கட்டுரைகள் எழுதி இருக்கிறார். திரிபுரித் தீர்மானத்தைப்பற்றியும், தலைவர் ராஜிநாமா செய்ததற்கு காரணத்தைப்பற்றியும், அதற்குப் பிறகு ராஜேன் பாபு தலைவராக ஆனதன் பிரமேயத்தைப்பற்றியும் வெகு விவரமாக உண்மையை வெளிப்படுத்தி இருக்கிறார். முன்னணிக் கட்சியினால் தேசத்துக்குக் கெடுதலே தவிர நன்மை வராது என்று தீர்மானமாக எடுத்துக் கூறுகிறார்.

ஐக்கிய மாகாணத்தில் ஷியா-சுன்னி சச்சரவு இன்னும் ஒழிந்தபாடில்லை.

பீஹார் மாகாணத்தில் லஞ்சப் பேயை ஒழிப்பதற்காக சர்க்கார் ஒரு மசோதா கொண்டுவரப்போவதாகத் தெரிகிறது.

மைசூர் சமஸ்தானத்தின் சீர்திருத்தக் கமிட்டி ஏற்படுத்திய திட்டம் சில விதங்களில் சமஸ்தான காங்கிரஸ் கோரினபடி அமையவில்லை என்பதாக ஸ்ரீ கே. டி. பாஷ்யம் திட்டத்திற்கு சில சீர்திருத்தங்கள் எழுதி இருக்கிறார்.

சென்னையில் கைதிகளாக இருக்கும் ஹிந்தி எதிர்ப்பாளர்களை அவ்வியக்கம் அஸ்தமனம் அடைந்திருக்கிறபடியால் விடுதலை செய்துவிடலாம் என்ற பிரச்னை சர்க்காரால் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா இந்த மூன்று தேசங்களின் ஒப்பந்தம், இவ்வளவு நாளாய் சேம்பர்லின் செய்த முயற்சியால், செய்துக் கொள்ளக்கூடும் என்று தெரிகிறது. மேற்படி ஒப்பந்தப்படி இம்மூன்று தேசத்தின் எல்லைகளில் எந்த பாகத்தையாவது சர்வாதிகாரிகள் ஆக்கிரமித்தால் இம்மூன்று தேசங்களும் ஒன்று சேர்ந்து அவர்களை எதிர்க்கும் என்று ஏற்படுகிறது. இம்மூன்று தேசங்களில் ஏதாவது ஒன்றால் உத்தரவாதம் செய்துக் கொடுக்கப்பட்ட ஏதாவது ஒரு சிறிய நாட்டை சர்வாதிகாரிகள் பயமுறுத்தித் தாக்கினால் இம்மூன்று தேசமும் அதன் உதவிக்குச் செல்லும் என்பதும் அந்த ஒப்பந்தத்தின் ஷரத்துகளில் ஒன்று.

மேற்கண்ட ஷரத்துகளை மாஸ்கோவுக்கு சேம்பர்லின் பிரஞ்சு சர்க்காரின் ஆலோசனையுடன் அனுப்பி இருக்கிறார். ஸோவியத் அதை ஆமோதித்து ஒப்பந்தத்தை செய்துக் கொள்வார்கள் என்று தெரிகிறது.

# விதி

எழுதியவர் :
ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி

மொழி பெயர்த்தவர் :
ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்

## 1

முத்து என்றால் அவன் முத்துதான். அவன் ஒரு விபரீதப் பிரகிருதி. வேறொன்றுமில்லை—அங்கஹீனன் அல்ல; மேதாவி அல்ல. தர்மசிந்தனையும் பரோபகார புத்தியும் அவனுடன் கூடப் பிறந்தவை. பிறக்காத பிள்ளை அவன்—வெடித்த சுவரில் முளைத்த செடி மலர்; சிப்பியில் உதித்த முத்து; பாரைச்சந்துகளிலிருந்து கிளம்பும் நீரருவி. அவன் தலைமுறையையே பரிசுத்தம் செய்யத் தோன்றிய தொண்டன்—அவனுடைய தியாக புத்தியால்தான் சமூகம் கடைத்தேற வேண்டும். ஆயிரத்தில் ஒருவன் அவன்.

அவன் தாயார்—கௌரவ புத்தியுள்ளவள், பொறுமைசாலி—எல்லாவற்றையும் தனது தலையில் போட்டுக்கொண்டு செய்பவள்—பழைய காலத்து ஹிந்து ஸ்திரீ. சரியான வைத்தியமும் கவனமுமில்லாததால் குழந்தையைப் பெற்ற பத்தாம் நாள் அவள் இறந்து போனாள். அவள் மனோபீஷ்டங்களில் ஒன்றுகூட நிறைவேறாமல் இறந்தாள். மண வாழ்க்கையில் அவளுக்கு துக்கம்தான் மிச்சம்—வீட்டில், சச்சரவு துக்கம், கஷ்டம்—புருஷன் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை அவளை. குழந்தை பிறந்தால் ஒரு வழி பிறக்கும், நல்ல காலந்தான் என்று எண்ணினாள். வாழ்க்கையிருள் நீங்கி வெளியும் வெளிச்சமும் தோன்றும் என்று ஆசைப்பட்டாள், பாவம். ஆசை நிறைவேறும் போல இருக்கும் பொழுது யமன் கொண்டு போய் விட்டான்.

முத்துவின் தகப்பனார் ஒரு 'தத்தாரி'; அவன் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள். வீட்டின் மனைவியின் மாசற்ற இன்பத்தை வெறுத்துத் திருட்டு சுகத்தின் தித்திப்பையே தேடித்திரிந்தான். என்றோ அவன் வீடு தங்குவது—மனைவி முகம் பார்ப்பது—அதன் யதேச்சையான பலன்தான் முத்து. குழந்தை பிறந்து விட்டால் புருஷன் வழிக்கு வந்து விடுவான் என்று எண்ணினவள் போய் விட்டாள். விதி ஒரு திக்கில் ஒரேயடியாக ஆளை அதப்பாதாளத்தில் அமுக்கினாலும் மற்றொரு திக்கில் சில சமயங்களில் எதிர் பாராமல் தூக்கியும் விட்டு விடுகிறது அல்லவா? அப்பொழுது முத்துவின் பெரிய தாயாருக்குக் குழந்தை பிறந்து இறந்துவிட்டது. அந்தமாதிரி அவளுக்குப் பல தடவை ஏற்பட்டிருக்கிறது. எனவே தனது துக்கத்தை மாற்றக்கூடிய ஒரு குழந்தை கிடக்காதா என்று ஏங்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுது விதி முத்துவை அவள் மடியில் கொண்டு விட்டது.

தமாஷ் பேர்வழிக்கு வெகு சந்தோஷம். "அப்பா, கவலை விட்டது" என்று ஆறுதலடைந்தான். ஆள் பார்க்கிறதற்கு நன்றாக இருப்பான். முரட்டு ஆசாமி; ஆனால் சமத்காரமாக பேசி ஆளை மயக்கும் சக்தி உண்டு அவனுக்கு. பார்த்தால் பரமசாது போல இருப்பான். கண்களில் மாத்திரம் அவன் காமவெறி கூத்தாடும்; கெஞ்சுவது போலத்தான பேசுவான்; ஆனால் ஏதாவது சூழ்ச்சி செய்வதேதான் அவன் வேலை. இவ்வளவு குணங்கள் போதாதா? போலீஸ் உத்தியோகத்தில் அவன் நல்ல பேர் பெறுவதில் என்ன சந்தேகம்?

அதிகாரமும் பணமும் அவன் கையில் தாண்டவமாடின. கலக்டர்கள்கூட அவன் செல்வாக்கையும் தைரியத்தையும் கண்டு அசூயைப் பட்டார்கள். ஆனால் அவ்வளவு சம்பிரமத்திலும் அவன் பிள்ளை ஞாபகமே அவனுக்கு வரவில்லை. முத்துவுக்கும் தகப்பனாரின் கூத்து ஒன்றுமே தெரியாது. அவன் பெரிய தாயார் அவனைச் செல்வத்துடன் செல்வமாக அன்பைப் பொழிந்து வளர்த்து வந்தாள்.

முத்துவுக்கு வாலிபம் வந்தது. உலகம் தெரியாதவனாக சதா பகற் கனவு கண்டு கொண்டே இருந்தாலும் அவன் நன்றாக தேர்ச்சி பெற்றான். தகப்பனிட மிருந்து அவனுக்கு அழகும் தைரியமும், கிடைத் திருந்தது; தாயாரின் வயிற்றிலிருந்த போது அவளுடைய அளவு கடந்த கருணையைக்கூட அவன் தன் உடல் ரத்த மாகப் பெற்றான்.

2

வருஷங்கள் கழிந்தன. முத்துவை கிரா மத்திலிருந்து மாயவரத்துக்குக் கொண்டு போய் பள்ளிக்கூடத்தில் போட்டாள் பெரியம்மா. பணக்காரக் குடும்பத்திற் கேற்ற தடபுடலுடன் எல்லாம் நடந்தது சுமைசுமையாகப் புத்தகங்களும், பென் சல், பேனா நோட்டுகளும் யதேஷ்டம்; செலவுக்கு ஜேபியில் சதா பணம்; பள்ளிக் கூடம் போய் வருவதற்கு வண்டி; ஆனால் முதலிலிருந்தே பையன்களிடமும் வாத்தி யார்களிடமும் இருந்த பற்று போல அவனுக்குப் புத்தகங்களிடம் இல்லை.

உபாத்தியாயரின் தூங்கி விழிந்த குரலைக் காட்டிலும் காவேரியின் கொஞ்சு மொழியிலும் பறவைகளின் கத்தலிலும் அவனுக்கு அதிக ருசி இருந்தது. இருந் தாலும் அவனுடைய கெட்டிக்காரத் தனத் தையும் விபரீதமான சக்தி கொண்ட உணர்ச்சி வேகத்தையும் அவன் பள்ளிக் கூடத்தில் காட்டாமல் இருக்க வில்லை. பாட புத்தகங்களை ஊன்றிப் படிப்பதில் அவன் அவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை; ஆனால் பொதுவாக அவன் படித்தது ரொம்ப; ஒரு கட்டுப்பாட்டின் படி அவன் படிக்கா விட்டாலும் அவன் புத்தக ஞானம் வெகு விரிவாக இருந்தது. 'வாத்தியார்' கேட்ட கேள்விக்கு அவ னுக்கு ஒருவேளை சரியாக பதில் சொல்லத் தெரியாமல் போயிருக்கலாம்; ஆனால் முத்து கேட்ட சில கேள்விகளுக்கு வாத் தியாருக்கே பதில் சொல்லத்தெரியவில்லை. பெரிய இடத்துப் பையன் என்று வாத்தி யார்கள் அவனிடம் கொஞ்சம் பயந்தே நடந்தார்கள். அவர்களுடைய சம்பள பில்லில் கையெழுத்துப் போடும் முனி சிபல் சேர்மன் அவனுடைய நெருங்கிய பந்து!

பையன்களிடையே முத்துவுக்கு நல்ல பெயர்; செல்வாக்கு. அவன் பணக்காரன் என்பதற்காக மட்டுமல்ல; தயவையும் யதேஷ்டமாக பிஸ்கட்டாகவும் பக்ஷணங் களாகவும் அவர்களிடையே அள்ளி வீசி னான் தினமும். அவர்களுக்கு அவன்தான் தலைவன். அவன் எப்பொழுதும் தன் கையி லிருந்ததை பொதுவினியோகம் செய்யத் தயாரா இருந்தான் என்றால் அவன் செல்வாக்குக்குக் கேட்க வேண் டுமா? முத்து நாலாவது பாரத்திற்கு 'பிர மோஷன்' செய்யப்பட்டபோது நாட் டில் ஒரு பெரிய சம்பவம் நடந்தது. லார்டு கர்ஸன் துரை வங்காளப் பிரிவினை உத் தரவு போட்டார். அவ்வளவுதான். நாடே கரைகடந்த பேச்சிலும் செயலிலு மாக மூழ்கிற்று. முத்து தானும் சுரேந் திரநாத் பனர்ஜிபோல ஆத்திரமும் உணர்ச் சியும் கொண்டான். பிரிவினையை உடனே ரத்து செய்யும் படியாகச் செய்து இந்தியா வின் அடிபட்ட ஹிருதயத்தின் புண்ணை ஆற்றினாலொழிய அவனுக்கு உயிர் வாழ முடியாது போலிருந்தது.

உடனே வந்தே மாதரம் பத்திரிகைக்கு சந்தாதாரனானன். ஒரு இலவச வாசக சாலை ஆரம்பித்தான். காவேரிக் கரை யில் ஒரு 'மாபெரும்' கூட்டம் கூட்டினான். அவனேதான் அக்கிராசனர், பிரசங்கி எல் லாம். அன்னிய நாட்டுச் சரக்குகள் பகிஷ் கார இயக்கம் ஆரம்பித்தான். ஒரு சுதேசிக் கடையைக் கூட வைத்தான். இதையெல்லாம் கண்டு பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டருக்கு திகில் பிடித்துக் கொண்டது. பள்ளிக்கூடத்தில் அத்து போய்விட்டதென்று அபக்கியாதி வந்து விடுமே என்று அவர் கலங்கினர். இந்த சுதந்திர இயக்கத்தின் வேட்கைகளையும் உணர்ச்சிகளையும் முத்து பூராவாக அனு பவித்தான். ஒரு வார காலத்திற்குள் அந்த ஊரையே கிளப்பிவிட்டு விட்டான். அதில் தான் பிரமுகனாக நின்று தூங்கி வழிந்து கொண்டிருந்த இடத்தில் சுறு சுறுப்பையும் புது ஊக்கத்தையும் ஊட்டி னான். தேசத்திற்காக தான் உலக விஷயங் களில் இறங்கி வாத்தியார்கள் பிள்ளைகள்

எல்லோருக்கும் உலக விவகாரங்களைக் கற்றுக்கொடுத்தான். ஒரு மாகாணத்தின் மூலையில் குட்டையாக இருந்த பள்ளிக்கூடத்தையே தேசிய வட்டம் கொண்ட ஒரு நிறை குளமாக்கினான். அதன் உயிர் ஒரு வாய்க்கால்போல ஓடும்படி செய்தான்.

ஹெட்மாஸ்டரும் போலீஸாரும் பயந்ததைக் காட்டிலும் அவனுடைய பெரிய தாயார் அதிகமாகப் பயந்து போனாள். செல்வக்குழந்தை இந்தமாதிரி விபரீதமாக ஏதேதோ செய்கிறானே என்று அந்தம்மாள் கலங்கினாள். அந்தமாதிரியெல்லாம் உபயோகமில்லாத காரியங்கள் செய்யக்கூடாதென்றும் அந்தமாதிரி "தேசத்துக்கு உழைக்கிறேன்" என்று கிளம்புவதில் இருக்கும் ஆபத்தையும் எடுத்துக் காட்டி நல்வார்த்தை சொல்லி அவனைத் தடுக்க முயன்றாள். நன்றிகெட்ட பையன்களுக்காக காசை அப்படி வீணாக்குகிறது பிசகு; அவனுக்குத் தேவையானபோது ஒருவர் கூட ஒரு தம்பிடி தரமாட்டார்கள் என்றும் சொன்னாள். பெரிய தாயார் ஒரு பத்தாம் பசலி என்று முத்து அவளைத் தள்ளிவிட்டான். காலப்போக்கையும் நவீன யுவர்களின் தாராள புத்தியையும் அவள் அறியவில்லை என்று கருதினான். தாயார் தடுத்தால் குழந்தையின் போக்கு எப்பொழுதும் கொஞ்சம் தீவிரம்தானே ஆகிறது? வாத்தியார் கண்டித்தால் பையன் இன்னும் கொஞ்சம் அதிகமாகத்தானே எதிர்க்கிறான்? அதுவும் பையன் கெட்டிக்காரனும் தைரியசாலியாயும் இருந்துவிட்டால்?

அவ்வளவு தேசிய வேலைகளில் ஈடுபட்டபோதிலும் முத்துவுக்கு ஐந்தாவது பாரத்திற்கு "பிரமோஷன்" ஆகிவிட்டது. ஆனால் முதலாகத்தான் தேறவில்லை; வாத்தியார்களின் அன்பும் ஆதரவும் போய்விட்டது. ஹெட்மாஸ்டருக்கு முத்து சங்கடம் ஏற்படுத்தியதில் சின்ன வாத்தியார்களுக்கு முதலில் திருப்திதான். ஆனால் பிறகு தங்களுக்கே ஆபத்து வந்துவிட்டதைக் கண்டார்கள். முத்து தங்களையே அலட்சியம் செய்து எதிர்ப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. "நீ இந்தமாதிரி தலைதெரியாமல் அனியாயமாய் அத்துமீறிப் போனால் குட்டிச்சுவராய்ப் போவாய்" என்று எச்சரிக்கை செய்தார்கள் அவனை. ஆனால் அவர்கள் தனது இன்றியமையாத குணங்களையும் தேசசேவையையும் சரியாக மதிப்பிடவில்லையென்றுதான் முத்து கருதினான். தன் நடத்தையை சரியாக அர்த்தம் செய்துகொண்டு அவர்கள் அனுதாபம் காட்டாதது அவனுக்கு மிகவும் வருத்தமாய் இருந்தது. சிறுவரின் மனதைச் சரிவர இபற்றவேண்டியவர்களே இப்படிச் செய்கிறார்களே என்று துக்கப்பட்டான். உலகமே வறுமையும் பயங்கொள்ளித்தனமும் சேர்ந்த ஒரு கதம்பம் அன்று அவனுக்குப் பட்டது. அவனிடமே அவனுக்கு திருப்தி ஏற்படவில்லை.

மாதங்கள் ஓடின. பரீட்சை சமயம் வந்தது. ஐந்தாவது பாரத்திலிருந்து மெட்ரிகுலேஷன் வகுப்புக்குப் போக முத்து லாயக்கில்லை என்று நிறுத்திவிட்டார்கள். முத்துவுக்கு அது ஒரு இடியாக வந்தது. அதுவரையில் அவனுக்கு தவறுவது என்பதே தெரியாது. அவன் பரீட்சையில் தேறாமல் போனது பெரிய விபத்தாகிவிட்டது—வங்காளப் பிரிவினையை ரத்து செய்ய முடியாமற் போனதைக் காட்டிலும். அவனுடைய ஜய காலத்தில் அவனுடன் கச்சை கட்டிக்கொண்டு நின்ற பல நண்பர்கள் அவனுடைய தீர்க்க தரிசனத்தில் நம்பிக்கை இழக்க ஆரம்பித்தார்கள். பரீட்சை தேறாவிட்டால் ஒருவனுக்கு வாழ்க்கையில் அவ்வளவு தனிமை ஏற்பட்டு விடுகிறது! ஜாதியே போய் விடுகிறது! ஆனால் அவன் பெரிய தாயார் மட்டும் அவனைத் தேற்றி ஆறுதல் அளித்தாள். அவளுக்குத் தெரியும் தன் குழந்தையின் ரோஷமும் மனதும். ஆனால் முத்துவே அறியாத முறையில் அவனிடம் ஓர் மாறுதல் ஏற்பட்டது. அந்த முதல் தோல்வியும் நண்பர்கள் விலகினதும் அவனுக்கு ஆழ்ந்த வெறுப்பைக் கொடுத்தது. அவன் ஆசைகளெல்லாம் திடீரென்று அந்தரத்தில் நின்றன.

3

ஆனி மாஸம். காவேரியில் ஜலம் கரைபுரண்டு போய்க்கொண்டிருந்தது. குடகு மலையிலிருந்து வரும் அந்தப் புது வெள்ளம் காவி வர்ணமாகக் கொந்தளித்துச்

சென்று கொண்டிருந்தது. கரையோரத்தில் நின்ற முத்து அப்படியே மயங்கி கட்டுண்டவன் போல நின்றான்—மோகுடியின் முன் பாம்பு போலவும், பூரண சந்திரன் முன் அலைகடல் போலவும். அந்தக் கவர்ச்சி எங்கிருந்தும் புதிதாக வந்ததல்லவென்றாலும் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. முத்து தீர்க்காலோசனை செய்தான். பெரிய தாயாரின் பரிதபிக்கும் முகம் அவன் கண் முன் நின்றது. ஒரு நிமிஷம் கலங்கினான்; மறு நிமிஷம் சமாளித்துக்கொண்டான். வீட்டுக்குப் போய் பள்ளிக்கூடத்துப் பாட புத்தகங்களையெல்லாம் கொண்டுவந்தான். அவனுக்கு ஒரு ஆழ்ந்த நிம்மதியும் ஆனந்தமும் ஏற்பட்டன அப்பொழுது. பொன் கலந்த அந்த புனலைப் பார்த்துக்கொண்டே புத்தகங்களை ஒவ்வொன்றாக வெள்ளத்தில் விட்டான். ஒவ்வொன்றும் தனது பார்வையிலிருந்து மறைவதை உற்று கவனித்தான். சுழல்கள் ஒரு விசேஷச் செருக்குடன் சப்தித்துக் கொண்டு சென்றன. அந்தப் புண்ணிய நதியைப் போல தானும் ஒரு புன்னகை கொண்டான். ஒரே ஒரு நண்பன்தான் கூட இருந்து அந்தக் குதுகலத்தைப் பார்த்தான். அவனுக்கு முத்து கொண்ட உணர்ச்சிப் பெருக்கின் ஆழம் தெரியும்.

விளக்கு வைத்து முத்து வீடு திரும்பினான். பள்ளிக்கூடத்தின் திக்கிற்கு அவன் செய்த கடைசி நமஸ்காரத்தைப்பற்றி தாயாரிடம் சொன்னான். அவளுக்குக் கோபமும் ஆத்திரமும் கூட வந்தது. அவன் தன் வயதிற்கு மேற்போன அமைதியான குரலில் ஒரு சிறு பிரசங்கம் செய்து அவளை அடக்கினான்.

"இப்பொழுது இருக்கிற பள்ளிக்கூடப் படிப்பு வெறும வீண் தண்டம், அம்மா! வாத்தியார்கள் சக்தியற்ற பையன்களை அடக்கியாளும்கொடுங்கோலர்கள்; பையன்கள் அடிமைகள். ஆத்மஹத்தி நடக்கிறது. கோத்தனுக்கும் காண்ட்ராக்டருக்கும் தவிர வேறு யாருக்கும் அதனல் உபயோகமில்லை. வாழ்க்கை விசாலமானது, பலரகமானது, அம்மா! இயற்கைதான் பிரத்தியக்ஷமானது; தயாராக எதையும் கொடுக்கக் காத்திருக்கிறது. அறிய வேண்டிய விஷயங்கள் உண்மையில் வாழ்க்கையிலும் இயற்கையிலும்தான் இருக்கின்றன. உண்மையான வித்தியார்த்தி அந்தப் பள்ளிக்கூடத்தில் தான் கல்வி கற்பான். கூலிக்கு வேலைசெய்யும் உபாத்தியாயர்களிடமிருந்தும் புத்தகங்களிலிருந்தும் உண்மையான கல்வி வராது. கரைமோதியோடும் காவேரி ஒரு நிமிஷத்தில் எனக்கொரு பாடம் கற்பித்தாள். அதனல் என்கவலை நீங்கி விட்டது. அந்த திவ்வியமான ஜலத்தில் அதிகாலையில் ஸ்னானம் செய்தது போல நான் இப்பொழுது புனிதமாகி விட்டேன். இன்னும் மேலான ஒரு சீரிய வாழ்விற்கு நான் பக்குவமானவன் போல இப்போது எனக்கே தென்படுகிறது. பள்ளிக்கூடத்தில் படிப்பது வெறும் வீண். முயற்சி உண்மையான மனிதத் தன்மையை அது உயர்த்தி வளர்ப்பதில்லை. இந்தப்பட்டண வாசமோ காபி ஹோட்டல்காரர்களைத் தவிர வேறொருவருக்கும் உபயோகமில்லை. நாம் நமது அழகிய கிராமத்திற்குத் திரும்பிப் போவோம் அம்மா! நான் பிறந்துவளர்ந்த கிராமம்! அங்கேபோய் உபயோகமாக ஏதாவது கஷ்ட நிவாரணம் முதலிய நற்கருமங்கள் செய்து கொண்டு இருப்போம் அம்மா! இப்பொழுது நான் முற்றிலும் மாறிப்போய்விட்டேன்—அதாவது பெரியவனாகிவிட்டேன் என்றே வைத்துக் கொள்ளேன்! இனிமேல் நான் உன்சொல் படியே நடக்கிறேன், அம்மா! இப்பொழுது நீ என்வார்த்தைக்கு மறு வார்த்தை சொல்லாதே! இந்த ஜன்மத்தில் பள்ளிக்கூடம் எனக்கு இவ்வளவுதான். நாளைக்கு விடிகிறதற்குமுன் நான் நமது கிராமத்திற்குப் புறப்படுகிறேன்—நடந்து!"

(தொடரும்)

# லைப் அஷ்யூரன்ஸ்

"பல துளி பெரு வெள்ளம்"

(ஸ்ரீ. எஸ். கே. சுப்ரமணியம்)

[மானேஜிங் டைரக்டர்: இண்டோலங்கா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி]

இப்பரத கண்டம் பண்டைக் காலத்தில் செல்வம், கல்வி, மாட்சிமை, கௌரவம், புகழ், கீர்த்தி ஆதியாம் நாகரீக சின்னங்களில் மகா உன்னத திசையடைந்து விளங்கியதென்பதை பல தேசங்களிலும் அனேகர் சரித்திர வாயிலாக தெரிந்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனைய ஜாதிகள் இப்பொழுது தாம் அடைந்திருக்கும் உன்னத பதவியைக் கனவிலும் எண்ணியிராத காலத்தில்......அதாவது அநேக நூற்றாண்டுகளுக்கு முன்..... இந்நாடு வேத சாஸ்திர தர்ம அனுஷ்டானங்களில் மேன்மை யடைந்திருந்தது. இந்நாட்டிலிருந்தே நாகரீகம் கல்வி முதலானவை அயல் நாடுகளுக்குப் பரவின. அக்காலத்தில் இது "தேனும் பாலும் சொரியும் நாடு" "நில வளம், நீர்வளம் வாய்ந்த புண்ய பூமி" என்று பலவிதமாகக் கொண்டாடப்பட்ட தேசமாக விளங்கியது. ஆனால் இக் காலத்தில் அது பழங் கதையாய் விட்டது.

இது இப்பொழுது இருக்கும் கேவல நிலை இன்னொரு தேசத்தில் காணப்படாது. இப்பொழுது பாரதமாதாவின் புத்திர புத்திரிகள் இருக்கும் நிலை தேச பக்தர்களின் வயிற்றில் நெருப்பைக் கொளுத்தி விட்டது. அரை வயிற்றுக்கு உணவு கிடைக்காமலும், மாற்றிக் கட்டத் துணி கிடைக்காமலும், உடம்பிலுள்ள எலும்புக் கோர்வை வறுமையின் கொடுமையை விளக்க, இருக்கும் குடிசை நான்கு பக்கமும் அழுக்கால் நிறையப் பெற்று துர்நாற்றத்தை வீச எத்தனை கோடி ஜனம் கஷ்டத்துடன் தயங்குகின்றார்கள்? இப் பரிதாப நிலைமையை மாற்ற வழியுண்டா? இந் நாட்டை முன்னிருந்த செல்வ நிலைக்கு பழையபடி உயர்த்திவிட ஏதாகிலும் சூட்சியமுண்டா? அறியாமை என்னும் இருளால் மூடி இப்பொழுது மௌடீக நிலையிலிருக்கும் கிராம வாசிகளுக்கு சுகாதார முறையைப் புகட்டவும் கல்வியைக் கற்பிக்கவும், வீரம், வெற்றி, புகழ், துணிவு ஆதியாம் புருஷோத்தம குணங்களோடு உஜ்ஜீவியஞ் செய்யும்படி ஈடேற்றிவிடவும் மார்க்கமுண்டா? இந்த வினாக்களுக்கு பதில் "உண்டு" என்றே நான் சொல்லுவேன். எப்படி?

மேனாட்டு வாசிகள் எவ்விதத்தால் உன்னத பதவி அடைந்தார்களோ அவ் விதத்தால் இந்நாட்டு சகோதர சகோதரிகளும் அடையலாம். மேல் நாட்டிலுள்ளவர் யாவரும் இன்ஷ்யூரன்ஸ் வாயிலாக வறுமையென்னும் கொடிய பிணியினின்றும் விலகியிருக்கிறார்கள் எனத் தெரிந்துக்கொள்ளுகிறோம். ஏனெனில் அங்கே ஆண் பெண் இரு பாலாரும் இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ளுகிறார்கள். ஒரு குடும்பத்தில் சம்பாதித்தியஞ் செய்பவர் இறந்துவிட நேரிடின், அவர் செய்து கொண்ட இன்ஷ்யூரன்ஸினால் வரும் தொகை அக் குடும்பத்தைத் தளரவிடாமல் காக்கின்றது. அது அவர்களின் மகவுகளின் கல்விக்கும் தாபரத்துக்கும் ஆதாரமாகின்றது. ஆகையால் அந்நாட்டில் சிலர் தங்கள் கால்களையும், கைகளையும், கண்களையும் இன்ஷ்யூர் செய்து கொள்ளுகிறார்கள் என்று நாம் பத்திரிகை மூலமாகத் தெரிந்துகொள்ளுகிறோம்.

அமெரிக்காவின் ஜனத்தொகை சுமார் 13 கோடி. அதில் 5 கோடி ஜனங்கள் இன்ஷ்யூர் செய்திருக்கிறார்கள். இங்கிலாந்தின் ஜனத்தொகை 5 கோடி; அதில் நால்வருக்கு ஒருவரும், ஜெர்மனியின் ஜனத்தொகை $6\frac{1}{2}$ கோடி; அதில் மூவருக்கு ஒருவரும், ஜப்பானில் ஜனத்தொகை 9 கோடி

அதில் மூவருக்கு ஒருவரும் ஆக இன்ஷ்யூர் செய்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது. ஆனால் இந்நாட்டிலோ 600 பேருக்கு ஒருவர்தான் இன்ஷ்யூர் செய்திருக்கிறார்கள்! ஆகையால் இந்நாட்டில் வறுமையதிகரிப்பது அதிசயமா? அரை வயிற்றுக்கு உண்பவர் இன்னும் பத்து கோடி! வறுமையால் ஊரைவிட்டு அயல் நாட்டுத் தேயிலை, ரப்பர் தோட்டத்துக்கு ஓடிப் போகிறவர்கள் எத்தனை லக்ஷம்? இக் கொடுமையைப் போக்கி இந்நாட்டில் திரும்பவும் பண்டைக் கால உன்னத ஜீவியத்தை வருவிக்க வழியுண்டா? எவ்விதம்? இன்யூரன்ஸ் வாயிலாகச் செய்யலாம்.

இன்ஷ்யூரன்ஸ் வாயிலாக இந் நாட்டுக்கு எவ்விதம் செல்வாக்கு உண்டாகும் என்று ஒரு கேள்வி நிகழலாம். அதற்கு பதில் என்னவென்றால் இயல்புடையவர் எல்லோரும் சம்பாதிக்கின்ற காலத்தில் ரூபாய் 500-க்கு இன்ஷ்யூர் செய்யும்படி கேட்கப்படுகிறார்கள் என்று எண்ணிக் கொள்வோம். அப்படியாயின் 36 கோடி ஜனம்கொண்ட இந்நாட்டில் சம்பாத்தியம் செய்யும் வகுப்பினராக 10 கோடி ஜனங்கள் காண முடியாதா? அவர்களுள் ஒரு கோடி ஜனம் இன்ஷ்யூர் செய்ய முடியாதா? ஒரு கோடி ஜனம் தினம் ஒன்றுக்கு ஒரு அணு வீதம் மிச்சம் பிடித்து மாதாந்திரம் ரூபாய் 2 அல்லது 3 அல்லது 4 இன்ஷ்யூரன்சுக்கு பிரிமியம் செலுத்த முடியாதா? ஒரு கோடி ஜனம் இன்ஷ்யூர் செய்தால் ரூபாய் 2 வீதம் மாதம் 2 கோடி ரூபாய் செலுத்துவார்கள். ஆகையால் ஒவ்வொரு மாதத்திலும் ரூபாய் 2,00,00,000 (2 கோடி) மிச்சமாகுமல்லவா?

ஒரு நூல் நூற்கும் இயந்திரசாலை ஸ்தாபிதம் செய்ய சுமார் 3லக்ஷம் ரூபாய் போதும். இன்னுமொரு லக்ஷம் அதை நடத்த முதல் வேண்டும். ஆகவே எல்லாச் செலவும் நீக்கி மாதம் ஒன்றுக்கு 40 இயந்திரசாலை ஸ்தாபிதம் செய்யலாம். ஒவ்வொரு இயந்திரசாலைக்கு சுமார் 5000 சிப்பந்திகள் வேண்டும். ஆகையால் 40 மில்லுக்கும் 2,00,000 பேர்கள் வேண்டும். இவ்விதம் ஒரு வருஷத்தில் 480 இயந்திரசாலைகள் ஸ்தாபிக்கலாம். 480 இயந்திரசாலைகளில் 24,00,000 பேர் வேலை செய்ய இடமேற்படும். முன்சொல்லப்பட்டபடி 1கோடி ஜனங்களும் 2ரூபாய் மாதஞ் செலுத்தி இன்ஷ்யூர் செய்ததன் பலன் 24,00,000 பேருக்கு வேலை கொடுக்க ஏதுவாகிறது. இனி இந்த 24,00,000 பேரும் இன்ஷ்யூர் செய்யலாம். அவர்களும் மாதத்தில் ரூபாய் 2 பிரிமியம் கொடுத்து செய்து கொண்ட இன்ஷ்யூர் வாயிலாக 48லக்ஷ ரூபாய் மாதம் மாதம் இன்ஷ்யூரன்ஸ் நிதியில் சேர்க்கலாமல்லவா? ஒருவரின் உழைப்பில் நால்வர் சாப்பிடுவது இந்நாட்டில் யாருக்கும் தெரிந்த உண்மை. ஆகையால் 24,00,000×4=96,00,000 (சற்று ஏறக்குறைய 1கோடி) பேர்களுக்கு உணவு கொடுக்கலாம். இவ்வளவும் 1வருஷத்தில் செய்ய முடியுமல்லவா?

இனி 480 இயந்திரசாலைகளையும் 50 மைல் தூரத்துக்கு ஒன்றாக ஸ்தாபிதஞ் செய்யின் அதைச் சுற்றிய நான்கு திசையிலும் 25 மைல் தூரத்துக்குள் அடங்கிய கிராமங்களில் விளையும் பருத்தி முழுவதும் அந்த மில்லுக்கே விற்பனையாக ஏற்பாடு செய்து கொள்ளலாம். அதைச் சுற்றியிருக்கும் கிராமவாசிகள் பருத்தியை செய்கை பண்ணவும் விளைந்த பருத்தியை தாமே வாங்கவும் ஒவ்வொரு இயந்திரசாலையும் ஏற்பாடு செய்யவும் கூடும். ஒருவகையாலும் பருத்தியை வேறு தேசத்தாருக்கு விற்கக் கூடாது என்றும் கட்டுப்பாடுகளைச் செய்து கொள்ள இப்பொழுதுள்ள காங்கிரஸ் கவர்ன்மெண்டாரின் உதவி கிடைக்கும் என்பது நிச்சயம். ஆகையால் 480 இயந்திர சாலைகளிலும் நூற்கும் நூலை அதைச்சுற்றியிருக்கும் கிராமவாசிகளுக்குக் கொடுத்துக் கைத்தறி மூலமாக நெசவுத்தொழிலை மேன் மேலும் விருத்தி செய்யலாம். வேலையில்லாது தவிக்கிற பேர்களுக்கு நெசவுத் தொழில் கற்பித்து ஜீவியஞ் செய்ய வழி காட்டலாம். அவ்விதம் நெசவு செய்து முடிந்த ஜவுளிகளை (கதர் ஆடையை) வாங்கவும் ஆங்காங்கு ஸ்தாபிதமாயிருக்கும் இயந்திரசாலைகளே வாங்கி வியாபாரிகளுக்கு ஊர்கள்தோறும் விற்கவும்ஏற்பாடு

செய்வது மிகவும் சுலபம் என்று சொல்லவும் வேண்டுமா?

இவ்வித ஏற்பாட்டினால் இந்நாட்டிலிருந்து பருத்தி வெளியே போக அவசியமேற்படாது. இப்பொழுது பல ஜாதியாரும் 3 கோடி ரூபாய் விலையுள்ள பருத்தியைக்கொண்டு சென்று தங்கள் தேசத்தில் இயந்திரசாலையில் நெசவு செய்து தினிசுதினிசாகவும் விதவிதமாகவும் அழகுபண்ணித்திரும்பவும் இந்நாட்டுக்கே ஏற்றுமதி செய்து 30 கோடி ரூபாவுக்கு விற்கிறார்கள். இவ்விதமாக சுமார் நூறு வருஷங்களில் அன்னியநாட்டார் இந்நாட்டிலிருந்து கொண்டுபோன திரவியம் 2700 கோடி ரூபாயாகிறது. எத்தனை வருஷகாலம் இந்நாடு வருஷா வருஷம் 27 கோடி ரூபாய் ஜவளி வகையில் இழந்து விட முடியும்? ஆகையால் வெளி தேசத்துக்குப் பருத்தி போகாமல் தடை செய்வது அவசியம். பருத்தி வெளியேறாமல் செய்யின் இந்நாடு வறுமையினின்றும் விடுதலையாகும். இப்பொழுது வியாபார முறையிலும் அந்நியதேசத்துக்கு அடிமையாயிருக்கிறது. "உங்கள் பருத்தியை நாங்கள் வாங்கமாட்டோம்" என்று பன்முறைகளிலும் இந்நாட்டை அயல்தேசத்தார் பயமுறுத்தியிருக்கிறார்கள். ஏன் என்பதை பலரும் அறிந்திருப்பார்கள். கூட்டுறவுச் சங்கமூலமாக இப்பாரதகண்ட மக்கள் ஒன்றும் செய்ய இயலாதவர்கள் என்ற எண்ணம் அயல் நாட்டின் அடிப்படையிலிருக்கிறதே காரணம். இப்பாரத கண்டத்தில் இப்பொழுது தேசபக்தி நிமித்தம் மூலைமுடுக்கு தோறும் சொற்பொழிவு செய்து வீணில் ஜெயிலுக்குள் புகும் ஆவேசத்தைத் தவிர வேறொரு ஏற்பாடுகளையும் இந்நாட்டு மக்கள் செய்யமாட்டார்கள் என்று ஏற்படுகிறது. இந்நாட்டை வறுமையினின்றும் விடுதலை செய்ய சொற்பொழிவாலும், ஜெயில்புகுவதாலும், அயல்நாட்டாரை வெறுக்கிறதாலும் முடியாது. "நான் கொண்ட கொள்கைதான் சரி" என்று கட்சி பிரிந்து போராடுவதாலும் செய்து முடிக்க இயலாது. இதனால்தான் விவேகானந்த சுவாமியும் ஒரு அவுன்ஸ் காரியச்செய்கை 20 ஆயிரம் அந்தர் வெறும் பேச்சிற்குச் சமானம் என்று கூறியுள்ளார். ஆகையால் இனியாவது காரியத்தில் கவனமாகவிருப்போம். பருத்தியினால் வெளியேறும் செல்வம் போகாமல் தடுக்க ஏற்பாடுசெய்வோம். அடம்பங்கொடியும் திரண்டால் யானையையுங் கட்டும் வலிமை பெறும் என்பதை மறந்து விடக்கூடாது.

அடுத்த நிருபத்தில் இன்ஷ்யூர் வாயிலாக இந்நாட்டை மீண்டும் உன்னத நிலையடையச் செய்யலாம் என்பதை விவரத்துடன் தொடருவேன்.

---


## வாழ்க்கையே வாழ்க்கை

(எஸ். வி. வி.)

பிரசித்தி பெற்ற ஹாஸ்ய எழுத்தாளரான எஸ். வி. வி. எழுதிய ஹாஸ்யக் கட்டுரைகளில் இருபத்து இரண்டைத் திரட்டி புஸ்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. விலை அணா 12.

பிரதிகளுக்கு:

சுவேதாரண்ய ஆச்ரமம், 312, தம்பு செட்டித் தெரு, சென்னை.

"அடாடா மறந்துன்னு போயிட்டேன். 'பாரதமணி'க்கு சந்தா செலுத்தணும்னு இருந்தேன். ராத்திரி ரயிலுக்கு டிக்கட்டுகூட வாங்கிப்பிட்டேனே! சரி, இனிமேல் ஊருக்குப் போய்த்தான் மணியார்டர் பண்ணனும்."

"ஹூம்! இதுக்கா வருத்தப்படரே? நான் நாளைக்கு கட்டப் போறேன் சந்தா. அதோடுகூட உனக்கும் கட்டிப்பிடறேன். நீ ரூபாயை எடு!"

# எதிரலை

(ஸ்ரீ. பி. வி. சுப்ரமண்யம்)

காவிரிப்பூம்பட்டினத்தில் இருள் சூழ்ந்ததுபோல் அவனுக்குக் காணப்பட்டது. கண்ணகி அன்று தன் கணவனுடன் புக்ககம் போகிருள்.

அவனும் அவளும் குழந்தைப் பருவம் முதலே உயிர் நண்பர்கள். பொய்யும் உண்மையும் கலந்து வரும் நாள் முதற்கொண்டே கிட்டு, "நிச்சயம் நான் உன்னைத் தான் கலியாணம் செய்து கொள்ளுவேன், வேறு யாரையும் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன்" என்பான். அப்புறம் அவ்வளவும் கலகலக்கும் சிரிப்பில் கரைந்து அளவற்ற ஆனந்தத்தில் கலந்து விடும். பிறகு ஆதரவோ அஸ்திவாரமோ இல்லாத மனக் கோட்டைகள் அவ்வளவும் இன்று இடிந்து விழுந்து விட்டன. கண்ணகி போய் விட்டாள் !

அவனும் முகூர்த்த வைபவங்களில் கலந்து கொண்டான். அது அர்த்த மற்றது தான். நன்ருய் தெரிந்து தெரிந்து தான் இழக்கப்போகும் விலை யில்லாத வஸ்துவுக்கு யாராவது அழகு செய்வானு? அவன் செய்தான்! அன்று கண்ட காட்சியில் அவளைப் படம் பிடித்து — மனோவெளியில் நிறுத்தி—அதற்கு சிரஞ்ஜீவத்தைக் கொடுக்க அவனுல் முடியும். அதனுல் செய்தான். அந்த சிற்பத்தின் எதிரலை அவன் வாழ்க்கையில் எப்படிப்பட்ட மாறுதலை உண்டாக்குமோ? அவன் உள்ளத்தை உடைத்தாலும் உடைத்து விடலாம்! ஆனுல் அந்த சிற்பியாக இருப்பதற்கு 'எவ்வளவோ புண்ணியம் பண்ணி இருக்க வேண்டும். தவம் கிடக்க வேண்டும்' என்று அவன் எண்ணினுன். அவள் புறப்படும் போது கூட அங்கே நமெக்கென்ன வேலை என்று நினைத்து அவன் பின் தங்கி விட்டான். பிறகு வீட்டில் இருக்கப் பிடிக்க வில்லை. ஏதோ குழப்பம். 'போய்த்தான் பார்ப்போமே' என்று புறப்பட்டு அங்கே போனபோது, எல்லோருக்கும் நமஸ்காரம் செய்து விட்டு அவள் வண்டியிலேறிக் கொண்டாய் விட்டது. "போய் வரட்டுமா?" என்று கலியாண சுந்தரம் கேட்டதற்கு "போயிட்டு வாங்கோ மாப்பிள்ளை" என்ருன் கரகரத்த குரலில். கடைசியில் வண்டியும் புறப்பட்டது. அவள் ஏங்கிய பார்வையுடன் கிட்டுவைப்பார்த்தாள். அப்பார்வையில் உணர்ச்சியில்லை. "போய் வருகிறேன்" என்ற ஆசைக்குறியுமில்லை. அது அவனுடைய உடைந்த வாழ்க்கையைத்தான் ஞாபகமூட்டிற்று. வெகு நேரம் வரையில் பரந்த வான வெளியில் சிதறிக்கிடந்த புஷ்பங்களைப் பார்த்துக் கொண்டே நின்ருன். பிறகு "சின்னஞ் சிறு கிளியே, கண்ணம்மா — செல்வக் களஞ்சியமே" என்று ஏதோ முனகிக்கொண்டே வீட்டுக்குத் திரும்பினுன்.

2

நடக்கும் காரியங்கள் எல்லாவற்றிற்கும் காரணம் சொல்ல முடியாது — ஏதோ அமானுஷ்யமான சக்தி சில சமயங்களில் நம் வாழ்க்கையைத் திரட்டி யமைக்கிறது — என்பதற்குக் கிருஷ்ணமூர்த்தி திடீரென்று மாற்றப் பட்டது ஓர் உதாரணம். அதை அவன் விரும்பிக் கேட்கவில்லை. அதற்கு அவசியமும் பிரமேயமும் இல்லை. அவன் மீது ஒரு 'கம்ப்ளெயின்ட் பெடிஷன்' கூடப் போகவில்லை. இருந்தும் அவன் வேறு ஊருக்கு மாற்றப்பட்டான்.

வேலையை ஒப்புக் கொண்ட இரண்டு நாளைக்கெல்லாம் தான், அவன், தான் செய்த தவறை உணர்ந்தான். கண்ணகிக்கு இவ்வளவு அருகில் வந்து விட்டதில் அசாதாரணமானது ஒன்றும் அப்போது காணப்படவில்லை. இருந்தாலும் தான் அங்கே வந்ததில் ஏதோ தவறு செய்து விட்டதாகத் தான் அவனுக்குத் தோன்றிற்று. ஏனெனில் ஊருக்குப் பு

தாக வந்த பெரிய மனுஷரை ஊரில் எல்லோரும் தெரிந்து கொள்ள நிச்சயம் முயற்சி செய்வார்கள். அப்படிச் செய்வதில் அவன் உள்வாழ்க்கையின் ஏகாந்தம் கலைக்கப் படலாம். பிறகு...?

ஆம். அவன் எண்ணியதில் கொஞ்சங் கூடத் தவறில்லை. உள்ளூர் பிரமுகர்களெல்லாம் சேர்ந்து நடத்திய வரவு உபசாரத்தில் கலியாண சுந்தரமும் இருந்தான். கடைசியில் கூட்டம் கலையும் போது, கிருஷ்ணமூர்த்தி நழுவிவிடக் கூடப்பார்த்தான். அது முடியாமற் போயிற்று. "பழைய சொந்தத்தை விட்டுவிடக் கூடாதப்பா, அவசியம் வீட்டிற்கு வரவேண்டும். இப்ப வாண்டாம். வந்த புதிசு. வேலை ரொம்ப இருக்கும். என்றைக்காவது சௌகர்யப்படும் போது"— என்று ஆறி வரும் புண்ணைக் கிண்டியது போல் சொல்லிவிட்டுச் சிரித்தான். "வருகிறேன். வருகிறேன். அவசியம்வருகிறேன்.உள்ளூர் மாப்பிள்ளையை வந்துபார்க்காமல் இருப்பேனு" என்று ஏதோ அர்த்த மில்லாமல் அடுக்கினுன் கிருஷ்ணமூர்த்தி. அப்படி சொன்ன சொல்லைத் தட்டி, கட்டோடு அந்தப் பக்கம் போகாமலும் இருக்க முடியவில்லை. தனிப்பட்ட பல காரணங்கள். ஊரிலிருந்து கண்ணகியின் தகப்பனுர், "நம்ம குழந்தையை அவசியம் போய்ப் பார்த்துக் கொள்ளவும். ஏதோ ஸ்வாமிதான் முந்திப் பிந்தி தெரியாத அந்த இடத்தில் உன்னைக் கொண்டு போய் விட்டிருக்கிறுர்" —என்று எழுதி வந்த நச்சுவேறு.

முதல் தடவை மிகவும் தைரியத்தோடு தான் போனுன். போன இடத்தில் அநேகமாக சரியாகவும் நடித்து விட்டான். "கண்ணம்மா — என்ன சௌக்கியமா? ஊரிலிருந்து ஏதாவும் கடுதாசி கிடுதாசி வந்ததா?"— என்று கேட்டதில் தனக்கு வெற்றி கிடைத்து விட்டது என்பதே அவன் எண்ணம். அவளும் கேட்ட கேள்விக்கு பதில் மாத்திரம் சொல்லி விட்டு பேசாமல் இருந்திருந்தால் அவன் எண்ணம் சரியாகக் கூடப் போயிருக்கும். ஆனுல் அவள் "சௌக்கியந்தான். நீங்கள் தான் இந்தப் பக்கமே எட்டிப் பார்ப்பதில்லை" — என்று தன் குறையைத் தெரிவித்தபோது தான் அவனுக்கு வெலவெலத்துப் போய்விட்டது. உள்ளே புகைந்து கொண்டிருந்த அவ்வளவு உணர்ச்சிகளும் உடைத்துக் கொண்டு வந்து விடும் போல் தோன்றிற்று.

கலியாண சுந்தரத்தினிடம் ஆபீஸ் தொல்லையைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

இருந்தாலும் கிட்டுவின் கண்களில் புதியதோர் ஒளி வீசிற்று. வார்த்தைகள் தடுமாறின. கலியாண சுந்தரமும் விஷயத்தை ஒருவாறு கிரகித்துக்கொண்டான். நாட்கள் செல்லச் செல்ல அதைப் பின்னும் இரண்டொரு சமயங்களிலும் கவனித்தான் — அந்த இருவர் மனத்திலும் ஏதோ போராட்ட மிருக்கிறதென்று. ஆனுல் அதை அவன் வெளிக் காட்டவே இல்லை.

அன்று ஞாயிற்றுகிழமை. வேலையும் அதிகமில்லை. கிட்டு தாழ்வாரத்தில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதேதோ வாழ்க்கைக் கற்பனைகள் நிறைந்த ஆகாயச் சித்திரம் வரைந்து கொண்டிருந்தான். பழைய நினைவுகள்!

எழுந்திருந்து சட்டையை மாட்டிக் கொண்டு கலியாண சுந்தரத்தின் வீட்டிற்குப் புறப்பட்டான். போனபோது அவன் வீட்டிலில்லை. கண்ணகி மாத்திரம் இரண்டாம் தரம் தேய்த்து வைத்த காப்பிப்பாத்திரங்களை எடுத்து அலமாரியில் அடுக்கிக்கொண்டிருந்தாள். கிருஷ்ணமூர்த்தியைக் கண்டதும் "வாஹும்—வாஹும், இப்போதுதான் நினைத்தேன்" என்றுள்.

"கல்யாணம் இல்லையா?"

"யாருக்கு?"

எதிர்பாராத விதத்தில் போடப்பட்ட இந்த பாணத்தில் மறுதோல்வி. மனேதிடம் பறந்துவிட்டது. "கலியாண சுந்தரம் வீட்டில் இருக்கிறுரா? இல்லையா?" என்று கேட்டான். "உன் சுபாவமே இது தானே! குழந்தை முதற்கொண்டே உனக்கு வாய் ஜாஸ்தி" என்று மேலும் சொல்ல ஆரம்பித்தான்.

"இதே போல் வெகுநாளைக்கு முந்தி, உனக்கு ஞாபக மிருக்கிறதா—உனக்கு வேலையாவதற்கு முன்னுல்—?"

கடந்த நாட்களை எப்படியோ பேச்சின் நடுவில் வரவிட்டது தங்கள் நன்மைக்காக இல்லை என்பது இருவருக்கும் நன்றாய்த் தெரியும். கண்ணகி மேலே சொன்னாள். "நீ கூட அதற்கு 'வேறுயாரையும் கலியாணம் செய்து கொள்ளச்சொன்னால் மாட்டவே மாட்டேன்' என்று சொன்னாய். அதிருக்கட்டும். உனக்கு இன்னம் கலியாணம் ஆகவில்லை?"

"ஆகவில்லை"

"இல்லையா?"

"இல்லை"

"ஏன்?"

"கண்ணகி!"

கிருஷ்ணமூர்த்திக்குத் தலை சுற்றிற்று. நிலை தட்டுத் தடுமாறியது. சரேலென்று எழுந்து வெளியில் போய்விட்டான்.

3

மேஜைமேல் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. கல் முற்றத்தில் கிட்டு நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். இந்த உலகில் எந்த ஒரு மனிதனைக் கண்டாலே அவன் நெஞ்சில் ஈட்டியைக்கொண்டு குத்துவது போலிருக்குமோ அதே மனிதன் எதிரில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். "தப்பு எங்கே நேர்ந்திருக்கிறது. கொஞ்சம் நிதானித்துப்பார். நீங்கள் இருவரும் பிரிக்கமுடியாத சிநேகிதர்கள். ஜாதி வித்யாசமாவது உண்டா? அதுவும் இல்லை. இவ்வளவு இருந்தும்..."

"என் தலையெழுத்து ஒன்று சரியாக இல்லை."

"சை-உளராதே! உன் தலையெழுத்தைக்கண்டு பொறுமைப்படுகிறவர்கள் எத்தனையோ பேர்கள் இங்கே இருக்கிறார்கள். உன் வாழ்க்கையில் மறைக்க முடியாத தழும்பு நீ செய்த சிறு தவறினால் தான் ஏற்பட்டிருக்கிறது. உங்கள் இருவருக்குமே விவாகம் செய்யலாம்—வெண்ணெயை வைத்துக்கொண்டு ஏன் நெய்க்கு அழவேண்டும் — என்ற எண்ணத்தைத் தூண்டிவிட்டிருக்க வேண்டியது உன் கடமை. அந்த இடத்தில்தான் நீ தவறி விட்டாய். உன்னைக் கண்ணெதிரே கண்டு கொண்டிருந்ததில் அவர்கள் உன்னை மறந்து விட்டார்கள். நீ முதல் நாள் வீட்டிற்கு வந்தபோதே எனக்கு உன் மனதிலுள்ள போராட்டத்தின் தன்மை நன்றாகத் தெரிந்து போயிற்று. மேலே போகப் போக உன் மன அமைதியற்ற நிலை அதிகமாகப் போயிற்று. போன ஞாயிற்றுக்கிழமை......"

"ஆ! அன்று......நீ அதை—"

"ஆம். நாடகத்தின் பாதியில் தான் வந்தேன். சமூக அமைப்பின் விலங்குகளில் இருந்துகொண்டு உன் மனதில் பொங்கி எழும் உணர்ச்சிகளை வெளியில் கொட்டுவதைத் தவிர இம்மியும் உன்னால் மேலே போக முடியாது என்பது நிச்சயமாக எனக்குத் தெரியும். அந்த உணர்ச்சி என் மனதைப் புண்படுத்திற்று. கிளியைக் கூட்டிலடைத்துச் சீராட்டுகிறோமே என்ற எண்ணம் இன்றுவரை என் மனதைத் துளைக்கிறது"

கிருஷ்ணமூர்த்திக்குக் கண்ணீர் ததும்பியது. எதிரே குரல்கூடத் தளராத கல்நெஞ்சன் மனிதனா, தெய்வமா என்ற எண்ணம் அவன் மனதில் அடிக்கடி எழுந்தது. அவன் காலடிச் சத்தம் வெளிப்படிகளில் தேய்ந்து மறையும் வரைக்கும் அவன் போன வழியைப் பார்த்துக்கொண்டே சாய்ந்து கொண்டிருந்தான்.

அடுத்த வாரம் கிருஷ்ணமூர்த்தி மாற்றப்பட்டு தென் காட்டிற்குப் போனது தெய்வ சங்கல்பம் என்று சொல்வதற்கில்லை. அது அவனுடைய சங்கல்பமே தான்!

# கையெழுத்தும் தலையெழுத்தும்

(ஸ்ரீ. டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி)

நம் வீட்டுப் பயலுக்கு மணி என்று பெயர். சகஜமாக அவனை "மணிப்பயல்" என்று கூப்பிடுவது வழக்கம். அவன் எல்லா விஷயங்களிலும் மணிப்பயலோ இல்லையோ அவனுடைய கையெழுத்து மட்டும் "மணி மணி"யாகத்தானிருக்கும். அதற்காகவாவது அவனை மணிப்பயல் என்று கூப்பிட்டாக வேண்டும்.

மணிமணியாக 'இருக்கும்' என்றல்லவா சொன்னேன்? அது தப்பு; இருந்தது என்று சொல்லியிருக்கவேண்டும். சென்ற ஒரு மாதம் வரையில் நன்றாய்த்தான் இருந்து கொண்டு வந்தது. இப்பொழுது அத்தனையும் மாறி விட்டது. முன்பெல்லாம் ஒவ்வொரு கையெழுத்துப் போட்டியிலும் முதல் பரிசு வாங்கி வந்தான். கையெழுத்தைக் கண்ணில்தான் எடுத்து ஒத்திக்கொள்ள வேண்டுமென்றால் பாருங்களேன்! என்னுடைய சொந்தப் பாட்டியின் சாக்ஷாத் தங்கை அவன் எழுதியதைப் படிக்கும்போதெல்லாம் கண்ணுக்கு வெகு அருகாமையில் எடுத்துக் கொண்டு போய்த்தான் படிப்பாள். ஒரு விரற்கடை தூரம்தான் இருக்கும் கண்ணுக்கும் எழுத்துக்கும். அப்படியே ஒத்திக் கொண்டு விடுவாள் போலிருக்கும். ஆனால் சில பேர் 'அவள் கண்ணாடி யில்லாவிடில் அவ்வளவு கிட்டேதான் வைத்துக்கொண்டு படிப்பாள்', என்கிறார்கள். அது என்னவோ? இதனால் மணியின் கையெழுத்தின் மகிமை ஒன்றும் குறையவில்லை.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னால் நானும் மணியும் கடற்கரைக்குப் போயிருந்தோம். அங்கு "கையெழுத்தும் குணநிசயங்களும்" என்று ஒரு புஸ்தகம் கடையில் விற்பனைக்கு இருந்தது. மணிப்பயல் ஏதோ உடனே வாங்கிவிடுவான் போலத் திருப்பித் திருப்பிப் பார்த்தான் புஸ்தகத்தை. கடைசியில் வாங்கவில்லை. வீட்டுக்கு வந்துவிட்டோம். அன்றையமுதல் பிடித்தது சனியன்.

நாலுநாள் கழித்து ஒரு கடிதம் எழுதச் சொன்னேன் ஊருக்கு. அதை வாங்கிப் பார்த்தால் இடது கைப்புறத்திலிருந்து வலதுகைப்புறம் போகப்போக நீலகிரியில் ரயில் ஏறுவது மாதிரி உயரப் போய்க் கொண்டேயிருந்தது ஒவ்வொரு வரியும். 'என்னடா இப்படி எழுதியிருக்கிறாயே?' என்று கேட்டால் ஒன்றுமே சொல்லவில்லை பிற்பாடு தெரியவந்தது சமாசாரம். அந்த புஸ்தகம் சொன்னேனே அதில் எழுதியிருந்ததாம் இந்தமாதிரி:—

1. ஒருவன் எழுதும்போது கீழிருந்து மேல்நோக்கி எழுதிக்கொண்டே போனால் அவன் முன்னேறிப் போகக்கூடியவன் என்பதைக் குறிக்கும். அவன் உன்னதமான பதவிகளை அடைவான்.

2. ஒருவன் கையெழுத்து சுருண்டு சுருண்டு போகுமானால், அவன் ஒரு இடத்தில் நிலையாக இல்லாமல் உருண்டுகொண்டே போவான். இவன் ஒரு காரியத்தையும் முழுவதும் செய்யமாட்டான்.

3. ஒருவன் கையெழுத்து நிதானமாய் அழகாய் எழுதப்பட்டிருந்தால், அவன் ஒருவிதத்திலும் முன்னேறாமல் தன் அழகையே பார்த்துக் கொண்டிருப்பான்.

4. ஒருவன் கையெழுத்து சாய்த்து எழுதப்பட்டிருந்தால் அவன் சாய்ந்து கொடுத்துக் கொள்ளக்கூடிய குணத்தை உடையவனாய் இருப்பான். எந்த கஷ்ட நிலைமையையும் சமாளித்துக் கொள்ளும்படியான இயல்புடையவன்.

இந்தமாதிரிப் பலபல அபத்தங்களெல்லாம் இருக்கின்றனவாம் அந்தப் புஸ்தகத்தில்.

"இதைப் பார்த்துத்தானா இப்படி எழுத ஆரம்பித்தாய்?" என்று அவனைக் கேட்டேன். ஒரு அசட்டுச் சிரிப்பின் ரேகை படர்ந்தது அவன் முகத்தில். விஷயம் விளங்கிவிட்டதல்லவா?

"மூளையில்லாதவனே! நன்றாயிருக்கிற கையெழுத்தை வீணாகக் கெடுத்துக்கொள்ளாதே. இனிமேல் இந்தமாதிரி எழுதுவாயானால் தெரியும் சங்கதி போ!" என்று விரட்டி விட்டேன். ஆனால் விரட்டிவிட்டால் மட்டும் காரியம் ஆய்விடுகிறதா? அவனுக்கு முன்னேற்றம் அடையும் முயற்சியில் நான் சொல்வது காதில் படவேயில்லை. நாளாக ஆக எழுத்தெல்லாம் இடதுகைப்புறம் கடைசியிலிருந்து வலதுகைப்பிறம் முதல் வரிசைக்குப் போக ஆரம்பித்தது.

அவனை ஒருநாள் கூப்பிட்டு நியாயமாகச் சொல்லிப் பார்த்தேன்.

"கொஞ்சம் யோசித்துப்பார் நீயே. இந்த மாதிரி நீ எழுதினால் மட்டும் 'தேறிவிடப்

போகிறாயோ? அந்தப் புஸ்தகத்தைப் பார்த்தவன் ஒவ்வொருவனும் இந்தமாதிரி எழுத ஆரம்பித்தால் அத்தனை பேருமல்லவா கடைத்தேறி விடுவார்கள்? பெரிய பெரிய புலிகளாகி விடுவார்கள். இது எங்கேயாவது நடக்கக்கூடிய காரியமா? அர்த்தமில்லாமல் செய்யாதே. உன் தலையில் எழுதியபடிதான் நடக்கும். கையெழுத்தைக் கோணல் பண்ணிக்கொண்டால் தலையெழுத்து மாறிவிடுமா? நீயாவது முன்னேறவாவது!" என்றேன்.

நான் சொல்வது சரிதானென்று பட்டது போலிருக்கிறது. 'சரியாய் எழுதுகிறேன்' என்று அப்போதைக்கு ஒப்புக்கொண்டான்.

ஆனால் இப்படியே எழுதிப் பழகிவிட்டு உடனே பழைய கையெழுத்து வரவேண்டுமென்றால் வந்துவிடுமா? 'வரமாட்டேன் லேசில்' என்று சொல்லிவிட்டது.

இவனோடு இப்படி நான் அழுகிற அழகை போதாதென்று அவன் பள்ளிக்கூடத்து தலைமை உபாத்தியாயர் என்னிடம் வந்து அழ ஆரம்பித்து விட்டார். இவன் கையெழுத்தைப்பற்றி "இப்படியுமா ஸார், அவன் கையெழுத்தைக் குட்டிச்சவராக்குவீர்கள்! அதைக் கொஞ்சம் கவனிக்கக்கூடாதா? உருப்படக்கூடிய பிள்ளைகள் எங்கேயோ ஆயிரத்தில் அரை, கால். அதிலும் இந்தமாதிரி எழுத்து அழகு எங்கேவரும்?......" என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போனார். மணிப்பயலின் கையெழுத்தைப்பற்றி இவருக்கு இவ்வளவு கவலையென்றால் எனக்குப் பெருமையாயிருக்குமா இராதா? ஆனால் இவ்வளவு அக்கறை எதற்கு என்று அப்பொழுது தெரியவில்லை. பிறகு தெரிந்தது. பள்ளிக்கூடத்திற்கு "டைம் டேபிள்" "பள்ளிக்கூடக் கணக்கு" இவைகளையெல்லாம் எழுதுவதற்கு இவன்தானாம். இது தெரிந்தவுடன் நான் அவரை நேரிலேயே கேட்டுவிட்டேன். "உங்களுக்குக் கணக்கு எழுத வேறு ஒரு பையனுக்கும் கையெழுத்து நன்றாக இல்லையா?" என்று கேட்டேன். "எல்லா பையன்களும் அந்த புஸ்தகத்தைப் பார்த்துவிட்டார்கள். வேறு என்ன அனர்த்தம் வேண்டும்? ஒவ்வொருவர் வீட்டிலும்தான் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று பதில் சொல்லிவிட்டார். அவர் கையெழுத்து என்னமாயிருக்குமோ? நன்றாயிருந்தால் அவராகவே எல்லாவற்றையும் எழுதுவது தானே!

இவர் ஒருவர் மட்டும் இல்லை. எவ்வளவோ பேர் இந்தக் கையெழுத்து வியாபாரமாய் என்னிடம் அழுதுவிட்டார்கள். நான் மணியைக் கூப்பிட்டு ஒரு இரட்டைவரி கோட்புத்தகம் வாங்கி 'காப்பி' எழுதும்படி சொன்னேன். அவன் எழுதியதை வாங்கிப் பார்த்ததும் தூக்கி வாரிப்போட்டது எனக்கு. எழுதியது என்னவோ இரட்டை வரியில் தான். அவனாகப் போட்டு எழுதியிருந்தான். ஆனால் ஒவ்வொரு வரியும் இந்தப்பக்கம் கீழ்க்கோடியிலிருந்து அந்தப்பக்கம் மேல்கோடி வரையில் குறுக்கே போட்டு வைத்திருந்தான். இதை அறியாமை என்பதா? ஆணவம் என்பதா?

இந்தக் கஷ்டத்தை யாரிடம் சொல்லுவதென்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே நான் பார்ப்பவர் ஒவ்வொருவரிடமும் சொல்லி அழுகிறேன். அந்தமாதிரியே உங்களிடமும் சொல்லுகிறேன். இந்தமாதிரி நான் சொன்னவர்களில் ஒருவர் என்னைக் கேட்டார். "அவன் குழந்தைதானே! நான், என், நீர்கூடத்தான் இப்பொழுது அதைப் படித்தீரானால் அந்தமாதிரி எழுதிக்கொண்டு போவீர். லாட்டரியில் பணத்தைப் போட்டு ஒரேயடியாய் எதாவது அடித்துக்கொண்டு வருவோமா என்று எதிர்பார்ப்பதில்லையா? இது ஒரு செலவில்லாத லாட்டரி, கையெழுத்தை இப்படி அப்படி மாற்றிவிட்டு எதாவது வருகிறதாவென்று பார்ப்பது."

நீங்களும் அந்தமாதிரி என்னை கேட்கக் கூடும். ஆகவே, நீங்கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும் என்னைப் பொறுத்தவரையில் பதிலைச் சொல்லிவிடுகிறேன். நான் இந்தக் கையெழுத்துச் சமாசாரத்தைப் படித்து ஒன்றும் பிரமாதமாகக் கெட்டுப்போய்விடவில்லை. நான் இயற்கையிலேயே, முன்னேறுகிறவன், புத்திசாலி, காரியக்காரன். இந்தமாதிரி ஆசாமிகளுக்குள்ள கையெழுத்தெல்லாம் ஒன்றாக அமைந்திருக்கிறது. நானாக ஒன்றும் அதற்கென்று பண்ணிக்கொள்ளத் தேவையில்லை. நான் பிரகஸ்பதிக்குக்கூட சமானம் என்று தைரியமாய்ச் சொல்லலாம். ஏனென்றால் கேளுங்கள். நான் ஒரு தடவை ஊரில்லாதபோது என் தகப்பனாருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் தலை கால் ஒன்றும் புரியவில்லையென்று யார் யாரிடமோ காட்டிப் பார்த்திருக்கிறார். யாருக்கும் ஒரு எழுத்து கூடப் புரியவில்லை. நான் ஊருக்கு வந்ததும் எனக்குக் காண்பித்தார். எனக்கும் புரியவில்லை. பின் தோட்டக்காரன், வீடுகூட்டுபவன்வரைக் காட்டிப்பார்த்தேன் பிரயோஜனமில்லை. இந்தமாதிரிக் கடிதத்தை எந்த மடையன் எழுதினானென்று தபாலாபீஸ் முத்திரையிலிருந்து பார்த்தேன். (வெட்கம்!

(310-ம் பக்கம் பார்க்க)

# போர்ச்சுகல் நிலைமை

(ஸ்ரீ த. கிருஷ்ணமூர்த்தி)

ஸ்பெயின் நாட்டிற்கு மேலண்டை பாகத்தில் அட்லாண்டிக் கடற்கரையோரமாக விருக்கும் போர்ச்சுகல் மத்தியதரைக் கடலை உபயோகிக்கும் எம் மரக் கலங்களையும் நுழைவதினின்றும் வெளியேறுவதினின்றும் தடுக்கலாம். சென்ற மகாயுத்தத்தின்போது ஜனநாயக அரசுகொண்ட அந்நாடு நடுநிலைமை வகித்தது. 1386-ம் ஆண்டில் வின்சரில் இங்கிலாந்துடன் செய்துகொண்ட உடன்படிக்கையிலிருந்தே அந்நாடு பிரிட்டனுடன் நெருங்கிய உறவு கொண்டுவருகிறது. முன் காலத்தில் அந்நாடே கடல் மார்க்க வியாபாரத்தில் ஓங்கியிருந்தது. அதன்பயனாக அதற்குக் கிடைத்த காலனிகள் சில இன்றும் அதன் ஆட்சியிலிருந்து வருகின்றன. நெப்போலியன் ஆட்சியின்போது பிரிட்டன் போர்ச்சுகீசிய மக்களை அவருக்கு விரோதமாகக் கிளப்பியதுடன் அந்நாட்டின் மூலமாகவே ஸ்பானிய யுத்த அரங்கத்தில் நெப்போலியன் சேனையை எதிர்த்தது. அவ்வாறு நெருங்கிய உறவு கொண்டிருக்கும் போர்ச்சுகல் நாட்டிற்குப் பிரான்சு, பெல்ஜியநாடுகளுடன் பிரிட்டன் சுதந்திர உத்திரவாத மளித்துள்ளது.

1926-ம் ஆண்டு மே மாதத்தில் தளபதி கோமஸ், நாட்டின் ராணுவத்தின் உதவிகொண்டு லிஸ்பனில் ராணுவ ஆட்சியை நிறுவினார். அவர் எழுச்சிக்கு முன் போர்ச்சுகலில் ஜனநாயக ஆட்சி இருப்பினும் ராணுவ கலகத்தின்போது ஜனநாயக ஆட்சி சீர்கெட்டு கட்சிப் பிரதிகட்சிகள் ஓங்கி, வாதப்பிரதிவாதங்களில் இறங்கி நாட்டுக்கான சீர்திருத்தங்கள் தடைபட்டு வந்தன. ரோமிலிருக்கும் தனியாட்சிமாதிரி கத்தோலிக்க போர்ச்சுகலும் கட்சி சச்சரவுகளை ஒழிக்க எதேச்சாதிகார ஆட்சிமுறை அரும்ப இடங்கொடுத்தது.

இன்றைக்கு முதன் மந்திரியாகவும் சர்வாதிகாரியாகவும் விளங்கும் டாக்டர் சாலஸார் துவக்கத்தில் மந்திரி சபையில் பதவி ஏற்காவிடினும் 1928-ல் நிதி மந்திரியாகவும் 1932-ல் முதலமைச்சராகவும் வந்தார். கலகத்திற்குமுன் கோயிம்ரா பல்கலைக் கழகத்தில் பொருளாதாரச் சட்டப்பேராசிரியர் பதவியை வகித்துவந்தார். அவர் நாட்டின் தலைமை பதவியை ஏற்கவும் நாட்டைப் பொருளாதாரத் துறையிலே பல வகையிலும் முன்னேற்றியுள்ளார். அந்நிய நாட்டுக்கடன் 1930-ம் ஆண்டிலேயே முற்றும் ஒழிக்கப்பட்டதுடன் உள்நாட்டுக் கடன் தொகையும் வெகுவாகக் குறைக்கப்பட்டது. அதே ஆண்டில் போர்ச்சுகல்தேசிய பாங்கு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டினின்றும் விலக்கப்பட்டு எல்லா உரிமைகளுடன் தனியாக நிறுவப்பட்டது. லண்டன் செல்வமார்க்கெட்டில் கடன் எழுப்பி நாட்டின் துறைமுகங்கள் எல்லாவற்றையும் பெருக்கினார். அவர் நிதி மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்ட ஆண்டிலிருந்தே நாட்டின் வரவுக்குக் குறைந்தே செலவைச் செய்து வருகிறார். அரசாங்கக் கடன்களின் வட்டித்தொகையும் பெரிதும் குறைக்கப்பட்டது. அதனால் லண்டன் மார்க்கெட்டில் போர்ச்சுகீசிய அரசாங்கக் கடன் பத்திரங்களுக்கு மிகுந்த மதிப்பேற்பட்டது.

நாட்டின் சாலைகளையும், இருப்புப் பாதைகளையும் பெருக்கத் தனித்தனியே குழாங்கள் நிறுவப்பட்டு யாத்ரீகர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்பட்டன. தங்கள் நாட்டின் பாதுகாப்பிற்காகவும், காலனிகள் பாதுகாப்பிற்காகவும் சுமார் 32 லட்சம் பவுன் செலவில் கடற்படையைப் பெருக்கினார். அதே சமயத்தில் ஆப்பிரிக்காவிலிருக்கும் போர்ச்சுகீசிய காலனிகளின் பொருளாதாரச் செல்வமும் பெருக்கப்பட்டது. அட்லாண்டிக் கடற்கரையிலிருந்து இந்து மகா சமுத்திரக் கரை சேர நேரடியாக இருப்புப் பாதை நிறுவப்பட்டது. அங்கோலா துறை

முகமும் முசாம்பிக் துறைமுகமும் சீர்திருத்தப்பட்டன. டர்பன், பீரா, மொம்பாஸா துறைமுகங்களை விட போர்ச்சுகீசிய கிழக்கு ஆப்பிரிக்காவிலிருக்கும் லோரன்சோ மார்குவஸ் துறைமுகம் வளர்ந்துவிட்டது. வெளி நாட்டு வியாபாரத்திலும் அரசாங்கம் தலையிட்டு ஏற்றுமதி இறக்குமதியைத் தன் அதிகாரத்தில் கொண்டு வந்து முக்கியமாகப் பழ வியாபாரத்தையும், திராட்சை ரச வியாபாரத்தையும் மேலும் பெருக்கி வருகிறது. போர்ச்சுகலில் தொழிலாளருக்குச் சில சௌகரியங்கள் அரசாங்கம் செய்தாலும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்வது அரசாங்கக் குற்றமாகும்.

குழப்பத்திலிருந்த போர்ச்சுகலைச் சாலஸார் ஒரு கட்டுப்பாட்டிற்குட்படுத்தினாலும் மக்களுக்குச் சுதந்திரமில்லை. ஜனநாயக ஆட்சியை அவர் விரும்பவில்லை. ஆகவே அவருக்கும் அறிவாளிகளைக் கொண்ட குழாத்திற்கும் சச்சரவிருந்து கொண்டே வருகிறது. அவர் தம் எதேச்சாதிகாரத்தினாலும், ராணுவ, போலீஸ் பலம் முற்றும் அவர் பக்கமே யிருப்பதாலும் எதிர்ப்பு வெளிப்படவில்லை. 1933-லும், 1936 செப்டம்பரிலும் தோன்றிய கலகங்கள் வெளி நாடுகளில் செய்தி பரவுவதற்கு முன்னமேயே அடக்கப்பட்டுவிட்டன. பத்திரிகைகள், அரசாங்கப் போக்கை ஆதரித்தே நடைபெற வேண்டும். பேச்சு, கூட்டம், முதலியவைகளில் உரிமை கிடையாது.

சாலஸாரின் வெளி நாட்டுக் கொள்கைக்கு அந்நாட்டினிடையே எதிர்ப்பேற்பட்டிருக்கிறது. சர்வ தேச சங்கத்தில் ரஷ்யா சேர விரும்பியபோது சுவிஜர்லந்துடன் போர்ச்சுகல் நாடு ஒன்றே அது சேருவதை எதிர்த்தது. 1936 ஜூன் மாதத்தில் தளபதி பிராங்கோ ஸ்பானிய கலகத்தைத் துவக்கியபோது சாலஸார் மாட்ரிட்டில் சுத்த கத்தோலிக ஆட்சி நிலைபெற பிராங்கோவிற்கு உதவி செய்ய முன்வந்தார். அவர் கட்டுப் பாட்டிற்கு உட்பட்ட போர்ச்சுகீசியப் பத்திரிகைகள் பிராங்கோவைப் புகழ்ந்தும் அவர் கட்சியை ஆதரித்தும் வந்தன. பிராங்கோவை ஆதரிப்பவர் ஸ்பெயினைத் தாக்குவதற்குச் சதியாலோசனைக் கூட்டங்கள் லிஸ்பன் நகரிலேயே கூட்டினார்கள். 1936-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதத்தில் ஒரு போர்ச்சுகீசிய வர்த்தகர் மேலொப்பந்தத்தின் மேல் போர்ச்சுகல் தேசிய பாங்கு பிராங்கோவிற்குக் கடன் கொடுத்தது. பிராங்கோவிற்குச் சொந்தமான ஆகாய விமானங்கள் போர்ச்சுகலை ஒட்டிய ஸ்பெயின் பிரதேசங்களைக் கைப்பற்ற அந்நாட்டிற்குச் சொந்தமான ஆகாய விமானங்களையே உபயோகித்துக் கொண்டனர். அந்நாட்டினின்றும் உதவிபெறவும் அதன் மூலமாக இலகுவாக ஜெர்மன் உதவி வரவும் வேண்டி பிராங்கோ ஆதியிலேயே போர்ச்சுகலை ஒட்டிய பிரதேசங்களையே தெற்கிலிருந்து வட மார்க்கமாகக் கைப்பற்றினார்.

அதனால் பாதிக்கப்பட்ட ஸ்பானியர்கள் போர்ச்சுகல் நாட்டிற்கு ஓடவும் அவர்களைச் சாலஸார் அரசாங்கம் திருப்பிப் பிராங்கோவின் துப்பாக்கிக்கு இரையாக அளித்தது. தவிரவும் பிராங்கோ கப்பல்கள் ஸ்பெயின் கப்பல்களால் தாக்கப்படாமலிருக்க போர்ச்சுகீசிய யுத்தக் கப்பல்கள் உதவிபுரிந்தன. டாக்டர் மதுரீரா என்பவர் தலைமையில் மாட்ரிட் நகரைத்தாக்க உதவ ஒரு வைத்தியப்படையும் லிஸ்பனில் நிறுவப்பட்டது. ஜெர்மனியினின்றும் காமிரன் என்ற மரக்கலத்திலும் பிறவற்றிலும் வந்த ஆயுதங்கள் போர்ச்சுகல் மார்க்கமாகவே பிராங்கோவிற்குக் கிடைத்தன. யூனியன் கிளப் ரேடியோ நிலையத்தைப் பிராங்கோ போர்ச்சுகலின் அனுமதியின்மேல் உபயோகித்து வந்தார். அதே ஆண்டு செப்டம்பரில் பிராங்கோவின் உதவிக்காகத் தனியாட்சி போர்ச்சுகலின் தொண்டர் படையொன்று திரட்டப்பட்டது. லிஸ்பனிலிருந்த ஸ்பானிய தூதர் போர்சுகீசிய ரகசிய போலீசின் கண்காணிப்பிற்கு உட்பட்டார். அவர் முறையிடவே அவர் தம் பாதுகாப்பிற்காகவே அவ்வாறு செய்யப்படுகிறதென அரசாங்கம் கூறிவிட்டது. இறுதியாக அக்டோபர் 23-ம் தேதி தன் சம்பந்தங்கள் எல்லாவற்றையும் அறுத்துக்கொண்டது. மேற்கு ஆப்பிரிக்காவிலிருக்கும் பாட்டா துறைமுகத்தைப் போர்சுகீசிய யுத்தக்கப்பல் தாக்கியதுடன் அதைப் பிராங்கோ

ஆட்சியில் கொண்டு வர உத்வியது. அத்தகைய செய்கைகளால் மக்கள் கொதிப்படைந்தனர். தளபதி சான்ஜர்ஜோ செப்டம்பரில் தம் விமானத்தை வெளியில் விட்டு தாக சாந்திசெய்யச் சென்றிருந்தபோது ஒரு குடியானவன் விமானத்தின் மெஷினில் சிறிது மணலைத் தூவிச்சென்று விட்டான். அது தெரியாத சான்ஜர் ஜோ விமானத்தை எடுத்துக் கிளம்பியபோது அது நொறுங்கி விழுந்து அவரும் மாண்டார். தனியாட்சி ஏற்படவும் அதிலிருந்து தப்பித்து ஸ்பெயினில் வதியும் போர்ச்சுகீசிய அரசியல் தலைவர்கள் அனைவரும் செப்டம்பரில் கூடி சாலஸாரின் ஒரு தலைப் பட்ச நடிவடிக்கையைக் கண்டித்தார்கள். எனினும் பலனளிக்கவில்லை. ஜெர்மனியின் யோசனைப்படி கலகம் துவக்கப்பட்டபோது பிராங்கோவின் உதவிக்குத்தம் ஆயுதங்கள் யாவற்றையும் கொடுத்தார். பின் தமக்குப் புதிதாக ஜெர்மனியினின்றும் ஆயுதங்கள் பெற்றார். 1937-ல் கண் காணிப்பு ஏற்பட்டபோது ஜெர்மனியின் லீப்சிக் கப்பல் தாக்கப்பட்டது. அதற்காக ஜெர்மனி ஸ்பெயின் சர்க்காரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ய விரும்பியபோது பிரிட்டனும், பிரான்சும் அதன் யோசனையை ஆதரிக்கவில்லை. அதன் மேல் ஜெர்மனியும், இத்தாலியும் கண் காணிப்பிலிருந்து விலக, போர்சுகலும் தன் எல்லையைக் கண் காணிப்பினின்று வாபீஸ் பெற்றது. சென்ற வாரம் 19-ம் தேதி மாட்ரிட் நகரில் பிராங்கோ நடத்திய நகரப் பிரவேசவிழாவின் போது ஜெர்மன், இத்தாலிய, ஸ்பானிய கொடிகளுடன் போர்ச்சுகீசிய கொடிகளும் பறக்க விட்டிருந்தது கவனிக்கத்தக்கது. அந்நாடு தமக்குச் செய்த உதவியை அவர் ஒப்புக்கொள்ளுகிறார் என்பது தெரியவரும்.

ஜனநாயக வல்லரசுகளுக்கும் தனியாட்சி நாடுகளுக்கும் போர் நிகழின் போர்சுகல் எப்பக்கம் சேரும்? ஜனநாயக ஆட்சியிருப்பின் அது இங்கிலாந்தையே ஆதரிக்குமென வரலாற்றின் ஆதரவு கொண்டு கூறிவிடலாம். ஆனால் இப்போதிருக்கும் கத்தோலிக் தனியாட்சி, ரஷ்யாவுடன் சேரக்கூடியநாடுகளை ஆதரிக்குமா? நிச்சயம் ஆதரிக்காது என்று துணிந்தே கூறலாம். ஸ்பெயின் தனியாட்சி நாடுகளுடன் சேர்ந்தால், அந்நாடுகளே ஜனநாயக நாடுகளை விட வல்லமை பெற்றிருந்தால் அவைகளுடன் சேரும். இல்லாவிட்டால் ஸ்பானிய கலகத்தின் போதிருந்த மாதிரி நடுநிலைமையை வகிப்பதாகக் கூறிக்கொண்டு அவைகளுக்கு ரகசியமாக உதவி புரியும். அத்தகைய மனப்பான்மையைக் கொண்ட போர்சுகலைத்தன் காலனிகளை ஜெர்மனிக்குக் கொடுக்கும்படியும் அதற்கு நஷ்ட ஈடு கொடுப்பதாகவும் பிரிட்டன் கூறினால் எற்குமா? பெரிய சாம்ராஜ்யமாயிருந்து தற்போது மங்கியிருக்கும் அது ஸ்பெயினுடன் தனியாட்சி நாடுகளின் உதவியின் மேல் பழைய பெருமையை அடைய எத்தனிக்க முயன்றாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் தனியாட்சி நாடுகள் நிச்சயமாக வெற்றி பெறுமெனத் தெரிந்தாலேயே அவைகளுடன் சேரும். ஆகவே இன்றைய நிலையில் போர் தோன்றினால் நடு நிலைமையே வகிக்கும். ஆனால் ஆசை தனியாட்சி நாடுகளின் பக்கமேயிருக்கும்.

(307-ம் பக்கத் தொடர்ச்சி)

வெட்கம்) நான்தான் எழுதினதென்று தெரிந்துகொண்டேன்.

இப்பொழுது அந்தப் புஸ்தகத்தில் ஒருவன் கையெழுத்து "வேறு யாருக்கும்" புரியாதபடி சிக்கலாயிருந்தால் அவன் சாதாரண ஜனங்களுக்குப் பிடியாத சிக்கலான பிரச்னைகளில் ஈடுபடுவான். பெரிய வேதாந்தியாயும் விளங்கலாம்" என்று கண்டிருக்கிறது. "வேறு யாருக்கும்" புரியாவிட்டால் அந்தமட்டில் எனக்கே புரியாவிட்டால் எவ்வளவு மடங்கு அந்த சக்தி அதிகமாயிருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

எனக்கிருப்பதுபோல ஸ்வபாவத்திலேயே மகிமையுள்ள கையெழுத்து இருப்பவர்களுக்குத்தான் அந்தப் புஸ்தகத்திலிருப்பது உண்மையாகும். சும்மா தானாகக் கோணங்கி பண்ணினால் வந்துவிடுமா? உங்களுக்கும் சொல்லிவைக்கிறேன். வீணாய் கோணல் மாணலாய் எழுதாதீர்கள். என்னைப்போல ஆகிவிடுவீர்களே என்ற பயமே கிடையாது.

நீங்கள் பாவம் ஏமாந்து போவீர்களே என்றுதான்!

# டாக்கி அல்லது பேசும் படம்*

(ஸ்ரீ ஜி. கே. சேஷகிரி)

ஊமைப் படத்துக்கு அடுத்தபடி டாக்கி—பேசும் பாடும் படம். அதற்கு அடுத்தபடிகள் வர்ணப்படம், மூன்று டைமென்ஷன் படம், இவைகளெல்லாம் வந்து விட்டன. இன்னும் ரேடியோ படம், அதாவது டெலிவிஷன் (Television) படந்தான் பாக்கி. இதுதான் அசையும் படத்திற்கு விஞ்ஞான முறையில் அமையக்கூடிய, கடைசிப்படி என்று சொல்லலாம்.

சரித்திர முறையிலே பார்த்தால், நம் தேசத்துப் புராதன நிழல் நாடகங்கள் அசையும் படத்தின் மூலாதாரம் என்று நினைக்கலாம். ஆனல் நவீன அசையும் படத்தின் ஆரம்பம், 1894-ம் வருஷத்தில் எடிஸன் கண்டு பிடித்த கினடாஸ்கோப் என்ற கருவியே. இதனல் ஒரு சமயத்தில் ஒருவர்தான் பார்க்கலாம். பலபேர் ஒரே சமயத்தில் ஒரு படத்தை பார்க்கும்படி செய்தது தாமஸ் ஆர்மட் என்பவர் கண்டு பிடித்த விடாஸ்கோப். பிறகு 1927-ம் வருஷத்தில் ஒலியை ஒளியாகவும், ஒளியை ஒலியாகவும் மாற்றிக்கொள்ளும் வழிகளை ஆராய்ந்து பயன்படுத்திக் கொண்ட வகைகளாலே ஊமைச் சினிமாவுக்கு பேசவும் பாடவும் சக்தி வந்தது.

சினிமாவை ஒரு தனிக் கலையாக வளரச் செய்ததில் கிரிபித் (Griffith) என்பவர் 1907-ம் வருஷத்தில் கண்டு பிடித்த "க்ளோஸப்" ஒரு முக்கியமான சாதனமாகும். இதுவும் இதுபோன்ற கட் பாக், பேட் அவுட், டிஸால்வ் (Cut-Back, fade-out, dissolve) முதலிய இதர ஸாதனங்களும், சினிமாவை மற்ற கலைகளிலிருந்து வித்தியாசமுள்ளதான ஒரு தனிக்கலையாக விளங்கச் செய்தன.

நாடகங்களையோ, நிகழ்ச்சிகளையோ அப்படியே போட்டோ பிடித்துக் காண்பிப்பது சினிமா அல்ல என்று எடுத்துக் காட்டின மஹிமை 'க்ளோஸப்" புக்குத்தான். ஒரு காட்சியையோ, பாத்திரத்தையோ வெவ்வேறு வகையில் போட்டோ பிடித்துக் காண்பிக்கும் காமிராவின் சக்தியை சினிமா முக்கிய ஆதாரமாகக் கொண்டது. மேலும் காமிராவின் அசைவு, சினிமாவின் ஒரு முக்கிய அசைவைக் கொடுக்கிறது. இந்த உணர்ச்சிதான் சினிமாவை ஒரு தனிக் கலை ரூபமாக வளர்த்ததில் முதல்படி. இதன் உபயோகங்கள் பல. காமிராவின் அசைவினல் ஏற்பட்டன லாங் ஷாட், மீடியம் ஷாட், ட்ராலி ஷாட், பான் ஷாட் (Long Shot, Medium shot, Trolley shot., Pan-shot) முதலிய பல தோற்றங்கள். இவைகளெல்லாம் இப்பொழுது சினிமாவில் சாதாரணமாகக்கையாளப்படும் முறைகள்.

காமிராவின் பார்வையானது, (அதை காமிராவின் எண்ணம் என்று கூடச்சொல்லலாம்.) எங்கும் வியாபிக்கும் தன்மையுடையது. காமிராவினல் எந்த இடத்திலிருந்தும், எந்தக் கோணத்திலிருந்தும், எம்மாதிரி வேண்டுமானலும் படம் பிடிக்க முடியும். ஆனல் பாவத்திற்கும், சந்தர்ப்பத்துக்கும் தக்கவாறு காமிராவின் பார்வையை நிர்ணயிப்பதில்தான் சாதுரியம் வேண்டும்.

சினிமா ஒரு ஸெலுலாயிட் கலை" என்பதைத் தெரிந்துகொண்டு, அசையும் படத்தை சிருஷ்டிப்பதில் நூதன முறைகள் ஏற்பட்டதை, சினிமாக் கலை வளர்ச்சியில் இரண்டாவது படி என்று சொல்லலாம். சந்தர்ப்பத்திற்கும் பாவத்திற்கும் பொருத்தமாக, படம் பிடித்திருக்கும் பிலிம் சுருள் துணுக்குகளை, குறுக்கிக் கத்தரித்து, மற்றொரு பாகத்துடன் சேர்த்து ஒட்டுவதுதான் அசையும் படங்களுக்குக் கலா ரூபம் அளிக்கும் அம்சம். இதிலே காண்பிக்கும் கற்பனையிலும், சாதுரியத்திலுமே அசையும் படத்திற்கு விசேஷமாக ஏற்படக் கூடிய நயம் இருக்கிறது. ஒரு அசையும் படத்திற்கு வடிவமும், அழகும்

* இது 24-5-39-ல் சென்னை அகில இந்திய ரேடியோவில் செய்த பிரசங்கம்

கூட இந்த பிலிம் சுருள் துணுக்குகளின் சேர்க்கைக் கிரமத்திலிருந்து உண்டாகின்றன.

அசையும் படம் டாக்கியாக மாறின பிறகும், அது ஒரு அசையும் படம் என்பதை மறக்காமலிருப்பதுதான் அதன் கலை வளர்ச்சியில் அடுத்தபடி. டாக்கி ஊமைச் சினிமாவின் வம்சத்தை நிராகரிக்க முயலுவது வீண். அதிலிருந்து விலகுவதும் டாக்கி கலை வளர்ச்சிக்கு அணுவளவும் அனுகூலமாகாது.

அசையும் படத்திற்குப் பேச்சும், பாட்டும் கிடைத்த ஆத்திரத்தில் நாடகத்துடன் போட்டி போடுவதில் பிரயோஜனமில்லை. ஒரு நாடகத்தை அப்படியே படம் பிடித்துக் காண்பித்தால் அது டாக்கி ஆகாது. ஒரு நாவலிலோ, வேறு கதையிலோ, புராணத்திலோ, சரித்திரத்திலோ நடக்கும் விஷயங்களை பேசும் படங்கள் மூலமாக பாட்டுகளுடன் சேர்த்து எடுப்பதும் டாக்கி முறையல்ல.

ஒரு டாக்கி காண்பிக்கப்படும் வகையோ, அது செய்யப்படும் விதமோ, அதற்கு உபயோகப்படுத்தும் உபகரணங்களோ, அவைகளை உபயோகிக்கும் வழியோ, இவைகளெல்லாம் ஸாதாரணமாக நாடக சாலையிலோ, இதர சாலைகளிலோ உபயோகப்படுத்தும் முறைகளுக்கு முற்றிலும் வித்தியாசமானவை. அதனால் ஒரு கதையைப் படம் பிடித்துக் காட்டுவதன் முறையானது, அதில் நடக்கும் அநேக ஸம்பவங்களினால் நாம் கிரஹிக்கும் குணாதிசயங்கள் அனைத்தையும் ஒருங்கே சித்திரித்துக் காண்பிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும். இம்மாதிரி அதற்கென்றே தனியாக ஏற்படுத்தியிருக்கும் பத்ததியில் தயாரிக்கப்பட்ட "ஸீனேரியோ"வை சாதுரியமாக சித்திரித்துக் காட்டுவதே டாக்கியின் முக்கிய அம்சமாகும். நம் தமிழ்ப் படம் தயாரிப்பவர்கள் அநேகமாக மறந்துவிட்டதும் இதுவே.

டாக்கி என்றால் எப்பொழுதும் பேச வேண்டும், பாடவும் வேண்டும் என்ற நிபந்தனையே கிடையாது. பேச்சும் பாட்டும், சப்தமும் சங்கீதமுமாக எப்பொழுது மாறுகிறதோ அப்பொழுதுதான் டாக்கியானது கலை வளர்ச்சியில் அதன் அடுத்த படியை அடைகிறது. அதாவது பாஷை தெரியாதவர்களுக்குக்கூட பேச்சும் பாட்டும் புரியும்படி சித்திரித்துக் காண்பிப்பதற்கு முயலுவதுதான் டாக்கியின் வருங்காலத்து நோக்கமாய் இருக்கவேண்டும்.

இப்பொழுது நம் படங்களை, முக்கியமாக தமிழ்ப் படங்களை எடுத்துக்கொள்வோம். இவைகள் இப்பொழுது எந்தப் படியிலிருக்கிறது என்று சொல்வதற்கே நான் வெட்கப்படுகிறேன். ஆனால் உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். அதையும் உவமையோடு சொன்னால் நன்கு விளங்கும்.

ஸ்வர்க்கப்படம் என்ற விளையாட்டு நம் நாட்டில் பெரும்பான்மையோருக்குத் தெரிந்திருக்கலாம். அயல் நாட்டுப் படங்கள் வெகு சீக்கிரமாக முன்னேற்ற ஏணிகள் வழியாக மேலே ஏறிப்போய்க் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்டமாக அசைந்து கொடுத்து நகர்ந்துவரும் நம் தமிழ்ப் படங்கள் அபஸ்மாரப் பாம்புகளின் வாயில் அகப்பட்டு, பாதாளத்தில் விழுந்துவருகின்றன. மறுபடியும் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டியதுதான்.

புராணப்படங்களில் நாம் ஆரம்பித்தோம். நம் தெய்வங்களையும், அவர்களின் பத்னிகளையும் சாமான்ய மனிதர்களுக்கும் கீழ்த்தரமானவர்களாகச் சித்திரித்து, அநேகமாக ஆபாஸமான பேச்சுகளையும், அசந்தர்ப்பமான சந்தர்ப்பங்களையும், அநுசிதமான பாட்டுகளையும் உபயோகித்து, தமிழ்ப் படங்கள் என்றாலே அருவருப்பு உண்டாகும்படி செய்துவிட்டோம்.

முருகனையும், கிருஷ்ணனையும் இரண்டு பெண்டாட்டிக்காரர்களாக திண்டாட வைத்தோம். ருக்மணியையும், சத்யபாமையையும் கீழ்த்தர கூடைக்காரிகள் சண்டை போடும் பாஷையில் பேசவைத்தோம். நாரதரை மாமாவாக்கினோம். எல்லாத் தெய்வங்களையும், கால்ச்சட்டையும் கைச்சட்டையும் போட்டு, பூட்ஸையும் மூக்குக்கண்ணாடியையும்கூட மாட்டி, ஸோபாக்களில் உட்காரவைத்து, ரோல்டாப் மேஜையிலிருந்து நோட் பேப்பரை எடுத்து, பவுண்டன் பேனாவினால் லிகிதம் எழுதி, பில்லை போட்ட பாயிடம் கொடுத்தனுப்பும்படி செய்தோம். சுண்வாச்ரமத்

தில் வளரும் சகுந்தலைக்கும், சுடுகாட்டில் சுற்றிச்சுழலும் சந்திரமதிக்கும் ஜரிகைப் பட்டாடைகளையும், ஜ்வலிக்கும் மணி மாலைகளையும் கொடுத்தோம். வெகு துரித மாக, சாரதா சட்டத்துக்குப் பயந்து நடத்துவதுபோல, எல்லாத் தெய்வங் களுக்கும், கணபதிக்குங்கூட, கல்யாணங் களை நடத்திவிட்டோம். கல்யாணமான தேவிகளுக்கெல்லாம் ஒரு சக்களத்தியை தேடிப்பிடித்துக் கொண்டுவந்து நிறுத்தி, சண்டையை விலைக்கு வாங்கினோம். விவாக ரத்து, தாம்பத்திய உரிமை கொண்டாடும் வழக்கு, இவைதான் பாக்கி வைத்திருக்கி றோம்.

பிறகு பக்தர்கள், நாயன்மார்கள், ஆழ் வார்கள், ஸித்தர்கள், ஆசார்யர்கள் இவர் களைக் கவனித்தோம். அவர்கள் வாழ்க் கையில் யார் யார் தாசி வீடு சென்றார்கள் என்று ஆராய்ச்சி செய்து, அவர்களைத் திரையில் கொண்டுவந்து நிறுத்தினோம். தாசி வீட்டுத் தாய்கிழவியும் மாமாவும் பேசும் ஆபாசமான சீன்களைச் சொன்னால் வெட்கக்கேடு.

அப்புறம் சமூகப்படம், சிறந்த சமூக சித்திரங்கள் என்று விளம்பரம் செய்யத் தொடங்கினோம். மாதப் பத்திரிகைகளில் மலிந்துவந்த நாவல்கள், நாடகமேடையில் அடிப்பட்ட ஸாரமற்ற நாடகங்கள், ஸம் பந்தமில்லாத பெயர்களை வைத்துக் கொண்ட உருத்தெரியாத கதைகள், இவை கள் தான் சிறந்த சமூக சித்திரங்களாக விளங்கின. இவைகளெல்லாம் தமிழ்ப் படங்களை உருப்படியாக்க வெளிவரவில்லை. பாலைவனத்தில் பூ பூத்தாப்போல், எதா வது ஒரு நல்ல படம் வந்தால், அதையும் சேர்த்து சாப்பிட்டுவிட்டு இன்னும் பாதா ளத்திலேயே உழலுகின்றன நம் தமிழ்ப் படங்கள். இந்தப் பரிதாபகாமான நிலை, எப்பொழுதாவது அபிவிருத்தியாகிய ஏணி யின் அடிப்படியையாவது நாம் அடை வோமா என்று சந்தேகிக்கும்படி இருக் கிறது.

கள்ள புருஷன் வருகையினால் ஏற்படும் ஆபாஸமான அடிதடி சண்டை ஹாஸ்ய மாகும்; அருவருப்பு கொடுக்கும் கோரக் காட்சிகள் அமைதியளிக்கும் சோகரஸ மாகும்; எப்பொழுதும் மாமியார் கொடுமை, குடியினால் வரும் கேடு, இவை களைக் கொண்டே கதைகள் கட்டலாம்; ஒரு ஜாதியினரை பரிஹாஸம் செய்வ தாலே சிறிப்பு மூட்டமுடியும்; தேசபக்தி என்ற வார்த்தையே எல்லா தோஷங்களை யும் நிமிஷத்தில் போக்கடிக்கும்; காரில் விரட்டுவது படத்திற்கு விருவிருப்பைக் கொடுக்கும். கல்யாணத்தில் தான் கதையை முடிக்க வேண்டும் என்ற இத் தகைய மூடநம்பிக்கைகளுடன் படம் எடுக் கும் பழக்கங்கள் எல்லாம் போகிறபோது தான் நம் தமிழ் டாக்கி முன்னேற்றத்தில் முதல் படியையாவது அடையும். இதோடு எந்தக் கதையானாலும் ஸரி, புரா ணமோ, இதிகாசமோ, சரித்திரமோ, அல்லது புதுக் கற்பனையோ, அதைச் சினிமாவுக்கென்று கொடுக்கும் தோரணை யில் ஒரு அடிப்படையான எண்ணம் இருக்க வேண்டும். அதைப் படமூலமாக சித்திரித்துக் காண்பிக்க வேண்டும். வார்த்தையினால் விவரித்து லெக்ச்சர் பண் ணக்கூடாது, பாட்டிலானாலும் ஸரி, பேச்சி லானாலும் ஸரி; அப்பொழுதுதான் நம் பேசும் படங்கள் மேன்மேலும் விருத்தி யடைய முடியும்.

எப்பொழுது நம் படங்கள், ஒரு கதை யைச் சொல்ல முயலாமல் அதைக் காண் பிக்க முயலுகிறதோ, அதே மாதிரி அதன் ஸந்தர்ப்பங்களையும், பாட்டுகளையும், பேச் சுகளையும் சாதுரியமாக சினிமா முறையில் சித்தரிக்க முயலுகிறதோ, அப்பொழுது தான் நம் டாக்கிகள் உன்னத நிலையை அடைய முடியும். ஒரு கதையைக் காண் பிக்கும் முறையில் அடையும் வெற்றி தான் ஒரு டாக்கியின் வெற்றிக்குக் கார ணம். எப்பொழுது நாம் டாக்கிகளை கேட்கப் போகாமல், பார்க்கப் போகி றோமோ, அதே மாதிரி அதன் பாட்டை யும், பேச்சையும் பார்த்து அனுபவிக்கி றோமோ, அப்பொழுதுதான் அசையும் படத்தின் அலாதி ரஸனையை உணர முடி யும். பிறகு நாமும் நம் தமிழ் டாக்கியில் அடுத்தபடி என்னவென்று தைரியமாக கேட்கலாம். நம் படங்களும், அசையும் படக்கலை வளர்ச்சி என்ற ஏணியில் படிப் படியாய் ஏறி அயல் நாட்டுப் படங்களு டன் ஸரிநிகர் ஸமானமாக விளங்கலாம்.

# பாக்கியலக்ஷ்மி எங்கு தங்குவாள்?

(ஸ்ரீமதி கமலாபத்மனுபன்).

வெகுகாலத்திற்கு முன் வாணீககர் என்ற ஒரு சிறியநாட்டை சுகுமாரன் என்ற ஒரு அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு மிகுந்த சமார்த்தியமும் சமயோசித புத்தியும் உள்ள ஒரு பத்தினி இருந்தாள்.

ஒரு நாள் வனத்திற்கு வேட்டையாடச் சென்ற இவ்வரசன் வேட்டை எல்லாம் முடிந்து அரண்மனைக்குத்திரும்பும் சமயத்தில், களைப்பு மேலிட்டு ஓர் மரத்தடியில் தங்கி சிரமபரிகாரஞ்செய்து கொண்டான். சிறிதுநேரம் நித்திரை செய்துவிட்டு, ஸுகுமாரன் கண் விழித்தெழுந்த பொழுது தன் எதிரில் இரண்டு ஸ்த்ரீகள் நின்று கொண்டிருப்பதைக்கண்டு திகைத்தான்.

அவ்விருவர்களில் ஒரு ஸ்த்ரீ, விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களினுல் தன்னை அலங்கரித்துக்கொண்டு, அவளுடைய தேகத்திலிருந்து சுகந்தபரிமளம் கமழ, புன்னகைபூத்த வதனத்துடன் ஜகஜ்ஜோதியாய் விளங்கினுள். அவள் அருகில் நன்ருய் அலங்கரிக்கப்பட்டு, ஆரோக்கிய சரீரிகளாய் விளங்கிய நான்கு குழந்தைகள் நின்று கொண்டிருந்தார்கள். இச்சிறுவர்களின் பெயர்கள "ஸந்தானம்" "ஸம்பத்து" "நற்கதி" "நன்மதி" என்பவை ஆகும். மேற்சொன்ன ஸ்த்ரீ தான் பாக்கியலக்ஷ்மி.

மற்ருெரு ஸ்த்ரீயும் ரூபத்தில் பாக்கியலக்ஷ்மிக்கு நிகராக இருந்தபோதிலுங்கூட அவளுடைய பொதுத் தோற்றம், முதல் ஸ்த்ரீயின் தோற்றத்திற்கு நேர் விரோதமாக இருந்தது இவள், கந்தல் துணியுடுத்தி, ஒட்டி உலர்ந்து போன தேகத்துடன் வாடிச்சுருங்கிய தன் முகத்தில் சிடுசிடுப்புத்துலங்க, எண்ணெய் கண்டு பல யுகங்கள் ஆகியிருக்குமோ என சந்தேகிக்கத்தக்கபடி தலைமயிர் சடை சடையாப் பறந்துதொங்க, கண்டோர் பரிதாபப் படும்படியான நிலைமையில் காக்ஷி அளித்தாள். இவள் அருகில் "பசி" "பிணி" "அதிருப்தி" "மரணம்" எனப்பெயர்களையுடைய நான்கு குழந்தைகள் எலும்புந்தோலுமாய் நின்றன. இந்த ஸ்த்ரீ தான் தரித்திரலக்ஷ்மி.

பாக்கியலக்ஷ்மியானவள் அரசனை நோக்கி, "ராஜனே, உன்னுடைய நாட்டைப் பார்வையிட்டு, உன்னுடைய குடிஜனங்கள் எங்களிருவரிடமும் எவ்விதமாக நடந்து கொள்கிருர்கள் என்பதை நாங்கள் அறியவிரும்புகிருேம். எங்களிருவரில் யாருக்கு சக்தி அதிகம் என்பதை நீ உண்மையை ஒளிக்காமல் எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும். நீயும் உன்னுட்டுப் பிரஜைகளும் எங்களிருவரையும பக்ஷபாதமற்ற, ஒரேவித அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்று உபசரிக்க பிரியப்படுகிறீர்களா என்பதை ஒளி மறைவின்றி தெரியப்படுத்தவேண்டும். என்னை உண்மை பக்தியுடன் பூஜித்துப்போற்றுபவர்களிடம் நான் எப்போதும் தங்கி இருந்து அவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அளித்துக் காப்பாற்றுவேன். இதோ இருக்கும் என் சகோதரியாகிய தரித்திரலக்ஷ்மியை, அதேவிதமாய் வணங்கிப்பூஜைசெய்து பாராட்டுபவர்களை, அவள்விட்டு விலகி இருந்து ரக்ஷிப்பாள். ஒரே காலத்தில் ஒரே இடத்தில் நாங்கள் ஒரு போதும் சேர்ந்திருக்கமாட்டோம். எங்கள் இருவரிடமும் நீயும் உன் பிரஜைகளும் எவ்விதமான அபிப்ராயமும் அன்

பும் கொண்டிருக்கிறீர்களென்பதை நேரில்கண்டு பரீக்ஷிக்க நாங்கள் இச்சமயம் இங்குவந்திருக்கிறோம்" என்று கம்பீரமாய் புகன்றாள்.

அரசன் சற்று ஆலோசித்து, "தேவிகளே, நான் என் மனைவியைக் கலந்து ஆலோசியாமல் ஒரு காரியத்தையும் செய்வதில்லை. ஆகையால் தயவு செய்து நீங்கள் சிறிது நேரம் அவகாசம் கொடுத்தால் நான் என் பத்தினியிடம் சென்று அவளுடன் கலந்து பேசி நீங்கள் விடுவித்த பிரச்னைகளுக்கு உத்தரம் அளிக்கிறேன்" என்று பயபக்தியுடன் பதிலளித்து, அவர்களிடம் விடை பெற்றுச் சென்று சம்யுக்தாவை அணுகி விஷயத்தை விளக்கினன்.

"நாதா, நாமும் நம் பிரஜைகளும் தரித்திர லக்ஷ்மியையும் பாக்கிய லக்ஷ்மியையும் ஒரேவித அன்புடனும் பக்தியுடனும் பூஜித்து வருகிறோம். இரண்டு பேரும் அபார சக்திவாய்ந்தவர்கள். அவர்கள் இருவரும் சேர்ந்துதான் நம் நாட்டைப் பாதுகாக்கிறார்கள். பாக்கிய லக்ஷ்மியை நம் நாட்டிற்குள் அழைத்து வந்து, பய பக்தி விச்வாஸத்துடன், நாம் பூஜை செய்ய தயாராக இருப்பதாயும், தரித்திர லக்ஷ்மியையும் அதேவித மனப்பான்மையுடன், நம் நாட்டிற்கு வெளியே வைத்து வணங்குவதாயும் தெரிவியுங்கள். ஏனெனில், பாக்கிய லக்ஷ்மி சொன்னபடி, அவர்களிருவரும் சேர்ந்தாப்போல் ஒரு இடத்தில் ஒரே காலத்தில் தங்குவது இயலாத காரியமானபடியால், அவர்களிருவரையும் ஏக காலத்தில் நம் நாட்டிற்குள் வரவேற்று உபசரிப்பது அசம்பாவிதமானது. பாக்கிய லக்ஷ்மி எக்காலத்திலும் நம் நாட்டிற்குள் தங்கி நம் ஜனங்களின் பாக்கியத்தைப் பெருக்கி ரக்ஷிக்கட்டும். தரித்திர லக்ஷ்மி நம் நாட்டிற்கு வெளியே இருந்து நம்மைப் பாதுகாத்து ரக்ஷிக்கட்டும். தாங்கள் இந்த பதிலையே அவ்விரு லக்ஷ்மிகளுக்கும் தெரிவித்து அவர்களுடைய பூர்ண ஆசியைப் பெற்று வரும்படி கோருகிறேன்" என்றாள் சம்யுக்தா.

அரசன் அத்யந்த மகிழ்ச்சியுடன் தேவதைகளை அணுகி தன் மனைவி சொல்லிக்கொடுத்திருந்தபடியே, நிஜமான அன்புடனும் வணக்கத்துடனும் கூறினன்.

அரசன் பதிலைச் செவியுற்ற பாக்கிய லக்ஷ்மியும் தரித்திர லக்ஷ்மியும் அளவு கடந்த சந்தோஷங்கொண்டு, அரசனை மெச்சி வாழ்த்தினர். அன்று முதல் வாணி நகரத்திற்குள் பாக்கியலக்ஷ்மி சஞ்சரித்து தன் கடாக்ஷத்தைப் பொழிந்து வந்தாள். தரித்திர லக்ஷ்மி நாட்டிற்கு வெளியே இருந்து தேசத்தை ஒருவித தீமையும் அணுகாதபடி காத்து வந்தாள்.

தேசாபி விருத்திக்காக பாடு படுகிறவர்கள், ஐச்வர்யவந்தர் என்றும், ஏழைகள் என்றும், வித்தியாசம் எள்ளளவும் பாராட்டாமல், இருதரத்தாருடைய க்ஷேமத்திற்காக பக்ஷ பாதமின்றி ஒரேவித ஆர்வத்துடனும் அன்புடனும் உழைப்பது அவசியம். அதுதான் உண்மைச் சேவையாகும். அப்பொழுதான் தேசம் செழிப்புற்று விளங்கும் என்பதை மறுப்பவருமுண்டோ?

## ரஷ்யாவின் சீரிய நிலைமை

விஸ்தீர்ணத்திலும், ஜனத்தொகையிலும், செல்வத்திலும், ரஷ்யா உலகத்திலுள்ள தேசங்களுக்குள் முக்கியமானதாக விளங்குகிறது. அதன் ஜனத்தொகை 17½ கோடி. ஐரோப்பாவிலுள்ள தேசங்களிலேயே அதிக ஜனத்தொகையுள்ள தேசம்தான். ஜனத் தொகையில் அதற்கும் பெரிய தேசங்கள் இந்தியாவும் சைனாவும் தான். அதன் எல்லைகள் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பரவி இருக்கின்றன. எனவே ஐரோப்பிய நாகரீகமும் ஆசிய நாகரீகமும் கலக்கத் தகுந்த இடமாக இருக்கிறது. ஜனத்தொகை அமைப்பு கூட வெகு ஸ்வாரஸ்யமாக இருக்கிறது. காகேஷியர்கள், மங்கோலியர்கள் ஸ்லாவோனியர்கள், இஸ்லாமிகள், முதலிய பற்பல ஜாதியினர் பற்பல பாஷைகளைப் பேசிக்கொண்டு அத்தேசத்தில் வசித்து வருகிறார்கள்.

அத்தேசத்தின் செல்வம் இன்னும் அதிகமாகப் பெருகவில்லை. செல்வத்தில் அதைக் காட்டிலும் பெரியவை யுனைடெட் ஸ்டேட்ஸ் போன்ற சில நாடுகள் தான்.

ஸோவியத் திட்டம் மைனர் நீங்கி மேஜராகி விட்டது. அத்திட்டம் 21 வருஷங்களாக பின்பற்றப்பட்டு வருகிறது: ஆகையால் அதன் குணகுணங்களை நாம் சிறிது சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம். மற்ற தேசங்களில் ஏற்பட்ட புரட்சிகளுக்கும், 1917ம் வருஷத்தில் ஏற்பட்ட ரஷ்ய புரட்சிக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. அது அரசியல் புரட்சி மாத்திரம் அல்ல. பொருளாதாரத்திலும் கூட கார்ல் மார்க்ஸின் முறைப்படி தொழிலாளிகளின் சர்வாதிகாரத்தை (Dictatorship of the Proletariat) அடிப்படையாகக் [...]ட திட்டம் அது.

* * *

[...]ாக ஸோவியத் ரஷ்யா தான் [...]ன் முதல் ஏற்பட்ட அபேத [...]டிஅரசு. இரண்டாவதாக [...]வெற்றிகரமாக தேசத்தில் பொது உடைமைத் திட்டத்தை அமைக்க பிரயத்தனம் செய்தது. அத்திட்டத்துக்குண்டான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் திட்டம் அனுபவத்தில் நடந்தேறி வருவதால் தான் அது "வெற்றிகரமாக பிரயத்தனம் செய்தது" என்றேன்.

போட்டி போடும் இவ்வுலகத்தில் உற்பத்தி வேலை செய்பவர்களின் சம்பளத்தைப் பொறுத்திருக்கிறது. அதுவுமல்லாமல் ரஷ்யா ஜனங்களுக்கு நுட்பமான வேலை செய்யச் சக்தியும் இல்லை; செய்யவேண்டும் என்கிற ஊக்கமும் இல்லை என்பதை ஸோவியத் திட்டத்தை ஏற்படுத்தினவர்கள் கண்டறிந்தார்கள். இப்படி இருக்கும் ஜனங்களுக்கு வேலை செய்ய ஊக்கம் அளிப்பது அதற்குத் தகுந்த சம்பளத்தால் தான். ஆகையால் தான் எல்லோருக்கும் சம சம்பளமாக இருக்கவேண்டும் என்கிற தீர்மானம் நிராகரிக்கப்பப்பட்டது. இருந்தாலும் அத்திட்டத்தின் அடிப்படையான கொள்கை என்னவென்றால், திட்டத்தின்படி எல்லா ஜனங்களுக்கும் அது வேலையளிக்கும் சக்திகொண்டதாயிருப்பதால், வேலை செய்பவர்களுக்குத் தான் ஆகாரமும் வோட் போடும் உரிமையும் கிடைக்கும் என்பதே. இரண்டு ஐந்து வருஷத் திட்டங்களின் முடிவால் தான் அமெரிக்கா முதலிய பல வெளிநாட்டு நிபுணர்களை பெரிய பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு வரவழைக்க நேர்ந்தது: அவர்களுக்குத் தகுந்த உயர்ந்த சம்பளமும் கொடுக்க நேர்ந்தது. அதுபோல உயர்ந்த சம்பளங்களை ரஷ்ய விஞ்ஞானிகளும் எஞ்ஜினீயர்களும்கூட வாங்கினார்கள். இதற்காகத் தான் சம சம்பளம் இருக்கவேண்டும் என்கிற கொள்கை நிராகரிக்கப்பட்டது. ஆனால் ஸோவியத் ரஷ்யர்கள் சொல்வதைப் பார்த்தால் இந்தப் புதிய கொள்கை பூர்ண பொது உடைமைத் திட்டம் வருமளவும் தான் இருக்கும், அதன் பிறகு சம சம்பளம் சாத்தியமாகும் என்பதாக ஏற்படுகிறது.

தொழில் சம்பந்தமாக ஸோவியத்தில் பின்பற்றப்படும் முறையைச் சொல்லப்போனால், ரஷ்யாவில் முதலாளித்வமே கிடையாது. உற்பத்தி, விற்பனை, இனமாற்றல், பாங்கிங், முதலிய சர்வமும் தேசத்தால் நடத்தப்பட்டு வருகிறது. ஆகையால் சில முதலாளித் தேசங்களிலிருப்பதைப் போல லாபம் சம்பாதிக்க வேண்டும் என்கிற எண்ணமே அங்கு இல்லாமல் இருக்கிறது. தேச மக்களின் நலனுக்காக எல்லாத் தொழில்களும் சர்க்காரால் நடத்தப்பட்டுவருகிறது. உறபத்தி செய்வதிலோ அல்லது விநியோகிப்பதிலோ லாபம் சம்பாதிக்க ஒரு மத்தியத்தரகனே கிடையாது. சர்க்காரே எல்லாத் தொழிற்சாலைகளையும் நடத்தி வருகிறது. சரக்குகளின் விலையை நிர்ணயிக்கிறது; தொழிலாளிகளின் வேலை செய்யும் நேரங்களைத் தீர்மானிக்கிறது. இயந்திரச் சாமான்கள் தயாரிப்பதற்காக 1928-ல் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஐந்து வருஷத் திட்டம் பல வெளிநாட்டு நிபுணர்களின் (முக்கியமாக அமெரிக்கர்கள்) பேருதவியால் முற்றுப்பெற்றது. அதே காரணத்தைக்கொண்டு 1933-ல் துவக்கப்பட்ட இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் வெற்றிகரமாக 1938-ல் முடிவடைந்தது. மூன்றுவது ஐந்து வருஷத் திட்டத்தை இப்பொழுது ஆரம்பித்து நடத்திவருகிறார்கள். இந்த திட்டங்களின் பூர்த்தியின் முடிவு என்னவென்றால், ரஷ்யாதேசத்தின் பொருளாதார நிலைமைக்கு அவச்யமான விவசாய யந்திரங்களும், தொழிற்சாலைக்கு வேண்டிய யந்திரங்களும், வேண்டிய அளவுக்குக் கிடைக்கும்படி ஆயிற்று. ஜெர்மனி, இத்தாலி தேசங்களைப்போல் ஜனங்கள் கட்டாயத் தொழிலாளிகளாக ஆகிறார்கள். தொழிலாளிகள் சங்கங்கள் சாதாரணமாக சுயேச்சையுடையதுதான். ஆனாலும் லேபர் கமிஷ்னர் அவைகள்மேல் ஆதிக்கம் செலுத்திவருகிறார். ரஷ்யத்-தொழிலாளிகளின் கூலிக்கு 'அபேதவாதக் கூலி' என்று பெயர். அதாவது தொழிலாளிகள் நாணயமாகக் கூலி பெறுவதுடன் சர்க்காரில் ஏற்படுத்தப்பட்ட சில ஸ்தாபனங்களால் இலவசமாகச் சுகத்தையடைய உரிமைப்பட்டவர்களாகிறார்கள். சம்பளத்துடன் லீவு எடுத்துக்கொள்வது, களைப்பாறு மாடங்கள், இலவசமாக வைத்தியம் செய்து கொள்ளுதல், இலவசமாகக் கல்வி கற்றல், கேளிக்கைக்காக ஏற்படுத்திய இடங்களில் வேடிக்கையாக காலத்தைக் கழித்தல் முதலிய சுகங்களையடைய உரிமைப்பட்டவர்களாகிறார்கள்.

விவசாய சம்பந்தமாக ஸோவியத் நிலைமை புகழத்தக்கது. எங்கும் கூட்டுப் பண்ணைதான். தனிப் பண்ணையே கிடையாது. இந்தக் கூட்டுப்பண்ணைகளில் பல நவீன எருவுகளும், விதைகளும், விவசாய இயந்திரங்களும் உபயோகப்பட்டு வருகின்றன. தனி நிலச்சுவான்தார்கள் 3 ஏகருக்குமேல் நிலம் வைத்துக்கொள்ளக்கூடாது. அதுகூட அந்த மூன்று ஏக்கர் நிலத்தை அவர்களே உழுது பயிர் செய்வதாக இருந்தால்தான். சர்க்கார் விவசாய இலாகாவுக்கு அனுகுணமாகத்தான இந்த நிலச்சுவான்தார்கள் பயிர்செய்ய வேண்டும். சர்க்கார் என்ன விதை எந்தகாலத்தில் விதைக்கச் சொல்லுகிறார்களோ அதன்படிதான் அவர்களும் செய்யவேண்டும்.

—டாக்டர் வங்கல சிவராம்



"தியாக பூமி"யில் ஓர் காட்சி